ஓம் ஓம்

ஓம்

# போதிப் பிள்ளையார் ஆற்றுப்படை

அனைத்துலக ஆசிரியர்
இ. சங்கரப்பிள்ளை

வெளியீடு :
போதிப் பிள்ளையார் திருப்பணிச் சபை

ம் ஓம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# போதிப் பிள்ளையார் ஆற்றுப்படை

அனைத்துலக ஆசிரியர்
Universal Teacher (E. S. P.)
**இ. சங்கரப்பிள்ளை**

வெளியீடு :
போதிப் பிள்ளையார் திருப்பணிச் சபை
தோப்பு,
அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிப்பிள்ளையார் தேர்த் திருப்பணிக்காக

விலை ரூபா : 50/-

அச்சுப்பதிவு :

திருமகள் அழுத்தகம்
சுன்னாகம், இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# உள்ளுறை

| | |
|---|---|
| போதிப்பிள்ளையாரின் திருவுருவப் படம் | |
| சமர்ப்பணம் | V |
| அருளுரை | VI |
| ஆசியுரை | VII |
| பிரார்த்தனையுரை | VIII |
| வாழ்த்துரை | X |
| அறிமுகவுரை | XII |
| அணிந்துரை | XIV |
| மதிப்புரை | XVIII |
| பதிப்புரை | XXII |
| நூலாசிரியரின் முகவுரை | XXIII |
| போதிப்பிள்ளையார் கோவில் வரலாறு | 1 |
| போதிப்பிள்ளையார் ஆற்றுப்படை | 7 |
| போதிப்பிள்ளையார் திருவூஞ்சற் பதிகம் | 11 |
| போதி அர்ச்சனை (நூற்றெட்டுத் திருநாமாஞ்சலி) | 16 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதிப் பிள்ளையார் திருவுருவப் படம்



## போற்றி ஓம் போதி, எம் வாழ்முதலே!

வள்ளுவன் நெறியினின் வழி நடந்தேறிய
பிள்ளைய னென்னைப் பிள்ளையாய்ப் பேணி
நின்தனின் அருளை நிந்தமாய்த் தந்த
நன்றி எந்நாளும் நினைவதென் பணியே.

(நூலாக்கியோன்)

(இந்நூலின் விற்பனை நிதி தோப்பு போதிப்
பிள்ளையார் திருப்பணி நிதியத்திற்கே உரியது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

போதிப் பிள்ளையார் துணை

# சமர்ப்பணம்

இத் தெய்வீக நூலை எனது அறிவறிந்த மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் பேரிலும் இனித் தோன்றவிருக்கும் வழித்தோன்றல்கள் பேரிலும் போதிப்பிள்ளையாரின் திருப்பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

## மக்கள்

1. திருமதி சங்கர நந்தினி தேவகுமார் (**ஆத்தாள்**)
2. திரு. சங்கரசேய் சங்கரப்பிள்ளை (**அப்பன்**)
3. திரு. சங்கர நந்தன் சங்கரப்பிள்ளை (**அத்தன்**)
4. திரு. சங்கரபோதி சங்கரப்பிள்ளை (**ஐயா**)

## மருமக்கள்

1. திரு. தேவகுமார் திலகர் (**தேவன்**)
2. திருமதி வானதி சங்கரசேய் (**அம்மா**)

## பேரப்பிள்ளைகள்

1. செல்வன் சேந்தன் தேவகுமார் (**லண்டன்**)
2. செல்வன் மயூரன் எஸ். பிள்ளை சங்கரசேய் (**நியூயோக்**)

**(இளையதம்பி சங்கரப்பிள்ளை)**

**3–12–90**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# யாழ்ப்பாணம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் வழங்கிய

# அருளுரை

அருளோங்கும் அன்பர்களே,

பிரணவ சொரூபியாம் விநாயகப் பெருமானுக்கு நாம் ஆற்றும் கைங்கரியங்களெல்லாம் அதிஉயர் ஸ்தானம் வகிப்பன. மிக எளிய வகையாலும் வழிபடுதற்குரியவரான அப்பெருமான் நிச்சயம் எம்பிழைகளையெல்லாம் பொறுத்துக் கருணைபாலித்தருளுவார் என்பது திண்ணம். சைவப்பெரியார் அறிஞர் திரு. இ. சங்கரப்பிள்ளை அவர்கள் போதிப் பிள்ளையார் தேவஸ்தான திருப்பணிச்சபைத் தலைவராகத் திறம்படப் பணியாற்றி வருபவர். இத்தால் அவருக்குரிய மதிப்பை நாம் உணரலாம்.

விநாயகப் பெருமானின் ஆக்ஞையும் அருளும் கூட்ட ''போதிப்பிள்ளையார் ஆற்றுப்படை'' எனும் பத்தி நூலினை யாத்து சைவ உலகுக்கு அளித்துள்ளமை பாராட்டுக்குரியது. சைவமக்கள் வரவேற்கத்தக்கதும்; பாராயணம் செய்து நற்பயன் பெறத்தக்கதுமான கைந்நூலிது. இதில் இப்புராதன ஆலய வரலாற்றினையும் சேகரித்து வரைந்துள்ளார் ஆசிரியரவர்கள். வருங்காலச் சந்ததியினர் அறிந்துகொள்ளவேண்டிய உண்மைகள் இவை.

ஆசிரியரின் தொண்டுகள் மேன்மேலும் வளர்ந்தோங்க வேண்டுமென விநாயகப்பெருமானின் பாதாரவிந்தங்களை உளமாரத் தியானித்து அவருக்கு எமது நல்லாசிகளை வழங்குகிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

6 - 8 - 90

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# அச்சுவேலித் தோப்பு
# போதிப்பிள்ளையார் ஆலயக் குரு
# சிவஸ்ரீ ச. கௌரிசங்கரசர்மா அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

**போதி விநாயகரைப் போதொடு தொழுவார்க்கு**
**மேதினியில் இல்லைப் பயம்.**

அனவரதமும் போதிப்பிள்ளையார் பாதம் பணியும் ஆசிரியர் உயர் திரு. இ. சங்கரப்பிள்ளை அவர்கள் மனதில் பிள்ளையார் பெயரில் ஆற்றுப்படை பாட அவா எழுந்ததே பிள்ளையார் சித்தம்.

ஆசிரியர் அவர்கள் ஆலயச் சூழலையும், ஆலயத்திற்குச் செல்லும் பாதை விபரத்தையும், ஆலயத்தின் மாண்பினையும் பற்றி மிக மிக அழகாகச் சித்தரித்துள்ளார். பொதுவாக கிராமப்புற ஆலயங்களின் சிறப்புக்கள் பெருந் தொகையான மக்களைச் சென்றடைவதில்லை. இவ்வாலயங்கள் பற்றிய தகவல்கள் பத்திரிகைகளில் வெளியாவதும், நூல்களாக உருவாவதும் மிக மிக அருமையெனலாம். இந்நிலையில் எமது போதிப்பிள்ளையாரின் சிறப்பினைப் ''**போதிப்பிள்ளையார் ஆற்றுப்படை**'' என்னும் நூலினை வெளியிடுவதன் மூலம் பலரும் அறியும் வாய்ப்பினை ஏற்படுத்திய பிள்ளையார் கோவில் திருப்பணிச்சபை முதல்வர் திரு. இ. சங்கரப்பிள்ளை அவர்கள் மேன் மேலும் இது போன்ற நூல்களை இயற்றி வெளியிட்டு எமது பழம் பெரும் சமயமாம் சைவம் தழைத்தோங்கச் செய்ய அவருக்கு எல்லாம் வல்ல போதிப்பிள்ளையாரின் அருட் கடாட்சம் கிடைப்பதாக!

போதி விநாயகா போற்றி! போற்றி!

சிவன் கோவிலடி,
ஆவரங்கால்.
5 – 8 – 1990

**சிவஸ்ரீ ச. கௌரிசங்கரசர்மா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதிதுணை

## ஆவரங்கால் சிவன்கோவில்

## திருப்பணிச்சபை முதல்வர்

## பண்டிதர் ச. சுப்பிரமணியம் அவர்கள் வழங்கிய

# பிரார்த்தனை உரை

மதிவளர் மவுலி உமாபதி வழங்கிய
துதிமிகு தும்பிக்கை யனும் சுதனே,
போதி நீழலாய், பூரணப் பொருளே
ஆதியே அருளாகர, ஐங்கர
நேதி என்றெலாம் நேடினர் நேர்படும்
போதனே புகல் என்றுனைப் போற்றுவார்
புந்தியே புறம் போகா(து) அமர்தரும்
நந்திதன் கண நாயக, நம்பனே
என்றும் உன்னருட்(கு) ஏங்குவர் எம்மவர்
பொன்றி டாவகை போற்றருட் பூதனே
வென்றியோடு நீ வீற்றிருந் தருள்புரி
இந்த நற்றலத்(து) எண்ணில் பணிபுரி
சிந்தையாளர் சங்கரப் பிள்ளையார்
ஆலயத்தின(து) அரும் வரலாறும்
பால சந்திர நின்பதம் பணிந்தே
குறைகள் களைந்திடும் குறிக்கோளாளர்
இறைவ நின்சந்நிதி எய்தி ஏத்தெடுத்தே
வரம் கொழும்வழி வகுக்கும் முகத்தமை
திரங்கொள் ஆற்றுப் படையும் சேரவே
மணங்கொள் மலரென வைத்துமுன் வணங்கவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எய்தினர்; எய்தரும் பெரியோய் ஏற்றருள்;
வைதிக சமயத்து வழியில் வழிவழி
கைதிகழ் கனியில் நின்கருணை கைவரவே
தோப்பூர் மக்களும் தொண்டரும் தொடரும்
யாப்பூர் மாந்தர் யாவரும் யாவும்
நலிவெலாம் அகலவும் நாளும் நாளும்
நலமெலாம் மலியவும் வாழ நல்குக
வாழி வாழ் முதலாகியோய் வாழியே!

போற்றி ஓம் போதி மேலோய்; கணங்களோடாடி போற்றி
போற்றி ஓம் கணுதிபா, ஓம்கண நாதா போற்றி போற்றி
போற்றி ஓம் ஏகநந்த; வளை துதிக்கையாய் போற்றி
போற்றி ஓம் கரிமுகேச; போற்றி ஓம் மகேச போற்றி.

போற்றி ஓம் தொந்தி உந்தி; போற்றி ஓம் புகைபோல் வண்ண
போற்றி ஓம் விகடக் கூத்த; போற்றி ஓம் இடையூறோட்டி
போற்றி ஓம் சுமுக; ஒன்னர்க்கு ஒவ்வாத வதன போற்றி
போற்றி ஓம் புதனே போற்றி, போதியே போற்றிபோற்றி.

ஆவரங்கால் **பண்டிதர் ச. சுப்பிரமணியம்**
**9-8-90**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

தமிழ்நாடு அரசு

திருக்குறள் நெறிபரப்பு மைய இயக்குநர்

**கலை மாமணி — தமிழ்மறைக் காவலர் திருக்குறளார்**

**வீ. முனிசாமி, B. A. B. L. அவர்கள்**

(தமிழ்நாட்டுச் சான்றோன்)

**மனமுவந்தளித்த**

# வாழ்த்துரை

எல்லோருக்கும் எப்போதும் நன்மையுண்டாக வேண்டுமென்று பிரார்த்தனை செய்கின்ற பழக்கத்தினை அளிக்க வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திப்பதை நான் வழக்கமாகக் கொண்டிருக்கிறேன். எனக்கு மிகவும் குறைவான எண்ணிக்கையில்தான் நான் நண்பர்களைப் பெற்றிருக்கின்றேன். நவமணிகள் என்று சொல்லப்படுகின்ற பெருமையைப் போல் என்னுடைய நண்பர்களை மிகப் பெருமையாக நான் பாவிக்கின்றேன்.

புகழ்ந்து சொல்ல வேண்டுமென்ற சிந்தனையே இல்லாமல் இயல்பாகவே நான் அறிமுகப்படுத்திக்கொண்டு பெருமைப்படுகின்ற கெழுதகைமை நண்பர் திருவாளர் இ. சங்கரப்பிள்ளை ஆவார்கள். சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் முதன் முதல் சந்தித்த காலந்தொட்டே என் உள்ளத்தில் நிலைத்து நிற்கும் அரிய நண்பர் திருவாளர் சங்கரப்பிள்ளை ஆவார். திருவள்ளுவர் குறித்துக் காட்டுவது போல் அறிவறிந்த மக்களைப் பெற்ற திரு. பிள்ளை அவர்கள் மிகச் சிறந்த பாரம்பரிய குணம் நிறைந்து இருப்பவராவர். அக்குணம்தான் தற்பெருமையாகப் பேச விரும்பாத மனப்பான்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியிலும், நிறைந்த ஆற்றலிலும், நுட்பமான அறிவுத் திறத்திலும் மிக மிக மேலானவர் என்று பாராட்டப்பட வேண்டிய நல்ல தகுதி திரு. பிள்ளை அவர்களுக்கு உண்டு என்று கூறுவது மிகையாகாது.

திரு. பிள்ளையிடம் பேசிக் கொண்டிருக்கும் போதெல்லாம் உலகியல் வரலாறுகள் பலவற்றையும் நான் தெரிந்து கொண்டேன். இது புகழுரையல்ல. திருவள்ளுவர் நட்பின் சிறப்பினை மிக உயர்வாகக் கூறுவதற்கு இலக்கணம் திரு. பிள்ளை அவர்களிடத்தில் பழகிய பிறகுதான் எனக்கு நன்கு விளங்கியது. பிள்ளையவர்களை மனமார வாழ்த்துகின்றேன்.

வள்ளுவர் கோட்டம்,
நுங்கம் பாக்கம்,
சென்னை – 34.

திருக்குறளார் வீ. முனிசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பிள்ளையார் துணை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி

**பேராசிரியர் டாக்டர் என். பாலகிருஷ்ணன் அவர்கள் வழங்கிய**

# அறிமுகவுரை

யாழ்ப்பாண சமூக வரலாறு தொடர்பான முக்கிய அம்சங்களை அறிந்துகொள்வதில் கிராமிய பாரம்பரியம் பற்றிய அறிவு உதவுகின்றது. கிராமங்களை மையமாகக் கொண்ட சமூக அமைப்பும், வாழ்வு முறையும் யாழ்ப்பாணத்தில் தொன்றுதொட்டு நிலைகொண்டு வந்துள்ளது. இதனுடைய பிரதான அம்சம் கோவில், குளம் என்பதைத் தழுவிய நிலைப்பாடே.

யாழ்ப்பாணத்தில் கோவில்கள் இல்லாத கிராமங்கள் இல்லையென்றே கூறலாம். இந்து - சைவ வழிபாட்டு மரபுகளும் முறைகளும் கிராமங்கள்தோறும் வளர்க்கப்பட்டும் பேணப்பட்டும் வந்துள்ளன. கிராமங்களும், கிராமத்து மக்களின் வாழ்வும், கலாச்சாரமும் கோவில்களையும், தெய்வ வழிபாடுகளையும் பெருமளவிற்குத் தழுவியுள்ளன.

இந்த அம்சத்தினை நன்கு எடுத்துக் காட்டுவதாக அச்சுவேலியில் தோப்பு கிராமமும், அங்கே எழுந்தருளியிருக்கும் போதிப்பிள்ளையார் கோவிலும் அமைவதைக் காணலாம். கிராமத்தவர்களும் அயலவர்களும் நூற்றாண்டுகளாகப் போதிப்பிள்ளையாரை வழிபட்டு வந்துள்ளனர். இக்கிராமத்தவர்களுடைய வாழ்விலும் நினைவிலும் போதிப்பிள்ளையார் கோவில் ஒரு நிரந்தரமான இடத்தினைப் பெறுகின்றது.

தோப்புக் கிராமத்தில் குடிகொண்டிருக்கும் விநாயகப் பெருமான்மீது ஆற்றுப்படை ஒன்றைப் பாடியதுடன் இக்கோவிலின், ஐரோப்பியர் வருகைக்கு முன்னரான காலம் உட்பட அதன் தொன்மையும் பெருமையும் பற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றினை போதிப்பிள்ளையார் மீது அளவிலாப் பற்றினை யுடைய திரு. இ. சங்கரப்பிள்ளை அவர்கள் எழுதியுள்ளார். கிராமத்தைச் சேர்ந்தவர் என்ற முறையில் ஆசிரியர் மண் வாசனையுடன் பல தகவல்களைத் தந்துள்ளார்.

தோப்புக் கிராமம் பெரும்பாலும் விவசாயிகளின் கிராமமாகவே இருந்துவந்தது. ஆனாலும் காலப்போக்கில் கிராமத்தவர்கள் கல்வியில் மட்டற்ற ஈடுபாடுகொண்ட தால் பல பிரபல ஆசிரியர்களையும் கல்விமான்களையும் இக்கிராமம் தோற்றுவித்துள்ளது. அவர்களில் ஒருவரான ஆங்கிலத்திலும், தமிழிலும் மிகு தேர்ச்சி பெற்றவரே இந்த நூலை ஆக்கியுள்ளார். இதே கிராமத்தில் பிறந்து; பின் னர் பலருக்கும் நன்கு தெரிந்த சிறந்த ஆங்கில ஆசிரிய ராகவும் முன்னாள் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரி அதிப ராகவும் கடமையாற்றிய காலஞ்சென்ற திரு. சங்கரப் பிள்ளை வீரசிங்கம் அவர்களின் மருமகனான திரு. சங்கரப் பிள்ளை அவர்கள் இதய சுத்தியுடன் மனமுவந்து பக்தி நெறியுடன் போதிப்பிள்ளையார்பற்றிப் பாடியும் எழுதியு முள்ளார். தான் பிறந்து வாழ்ந்த கிராமத்தில் நிலைகொண் டுள்ள போதிப்பிள்ளையார் பற்றிப் பாடவும், இக்கோவில் பற்றியும், கிராமம் பற்றியும் வரலாறு எழுதவும் நிறைந்த கல்வித் தகைமையும் ஆற்றலும்கொண்டவர். திரு. பிள்ளை அவர்கள். இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஆசிரியர் பாடியதையும், எழுதியதையும் அவர் போதிப்பிள்ளையா ருக்குச் செய்யும் பெருந் திருப்பணி என்றே கருதவேண்டும்.

போதிப்பிள்ளையாரின் அருள்பெறவேண்டி நிற்போமாக!

**பேராசிரியர் என். பாலகிருஷ்ணன்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கலைப்பீடாதிபதி

யாழ்ப்பாணம்.

*15-8-90*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர்

## திரு. சி. சிவசரவணபவன் அவர்கள்

மனவுவந்தளித்த

# அணிந்துரை

சின்னஞ்சிறு குழந்தையாக இருந்தபோதே, சிவபெருமானையும் உமாதேவியாரையும் நேரிற்கண்டு, எம் பிராட்டியின் திருமுலைப்பால் உண்ணும் பேறு பெற்றவர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

யாதுஞ் சுவடுபடாமல் ஐயாறடைந்தபோது முன்னர் கண்டறியாத இறைவனின் திருப்பாதங்களைக் கண்டு கரைந் துருகியவர் திருநாவுக்கரசுநாயனார்.

தன் திருமண நிகழ்ச்சியின்போது எம்பிரானால் தடுத் தாட்கொள்ளப்பட்டு, எம்பிரானுக்கன்பராயும், எம்பிரானை அன்பராயும் கொண்டு '' தம்பிரான் தோழர் '' எனப் போற்றப்பட்டவர் சுந்தரமூர்த்திநாயனார்.

பாண்டிய மன்னனின் ஆணைப்படி பரிகள் வாங்கச் சென்றபோது குருவடிவாய் வந்த சிவபெருமானிடம் ஞானோபதேசத்தைப் பரிசாகப் பெற்றவர் மாணிக்கவாசக சுவாமிகள்.

தாம் அடைந்த சிவானுபவங்களைத் தித்திக்கும் தேன் தமிழிற் பக்திச்சுவை நனிசொட்டச் சொட்ட இவர்கள் பாடிய தேவார திருவாசகங்கள், ஞானக்களஞ்சியங்கள், அருட்கருவூலகங்கள், சித்தத்தைச் சிவன்பால் வைத்து மண்ணில் நல்ல வண்ணம் வாழவும் விண்ணில் வீடுபேற்றை அடையவும் உதவும் ஆன்மீக வழிகாட்டிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நால்வர் காட்டிய நன்னெறியில் வாழும் நல்லோர் பலர் நம்மத்தியில் உளர். நால்வரைப்போல் இறைவனைப் தம் புறக்கண்களால் இவர்கள் காணவில்லை என்பதுண்மையே. கண்ணாரக் காணவிடினும் இறைவனை நெஞ்சார உணர்ந்தவர்கள் இவர்கள். சீலம், பக்தி, தியானம், தியாகம், சேவை, பணிவு காரணமாக இறைவன் தன்னை உணர்த்த உணர்ந்து கொண்டவர்கள் இவர்கள். யாழ்ப்பாணம் — அச்சுவேலியின் ஒரு மிகவும் செழுமையுள்ள பகுதியான தோப்பு என்னும் சிற்றூரிற் சைவ வேளாண்குடியிற் பிறந்த திரு. இளையதம்பி சங்கரப்பிள்ளை அவர்கள் தன் ஆரம்பக்கல்வியை அச்சுவேலி அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை யாழ் இந்துக் கல்லூரியிலும் பெற்றவர். திறமையிருந்தும் சில குடும்பப் பொறுப்புக்கள் காரணமாக மேற்படிப்பைத் தொடர முடியாத நிலையில் அரசாங்க சேவையில் சேர்ந்து சேர் ஜோன் கொத்தலாவலையின் பொதுப் பணித் திணைக்களத்திற் பணியாற்றினார். மூன்றரை ஆண்டுகளின் பின் அவ்வேலையில் சலிப்படைந்த அவர் தனது வேலையை ராஜினாமாச் செய்துவிட்டு சென்னைக்குச் சென்று வரலாற்றுப்புகழ் மிக்க சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் கற்றுச் சென்னைப் பல்கலைக்கழகப் பட்டதாரியானார். பின்னர் தாயகம் திரும்பி அச்சுவேலிக் கிறித்துவக் கல்லூரியில் இருபது ஆண்டுகள் ஆசிரியப் பணி புரிந்து நன்மாணக்கர் பலரை உருவாக்கினார். ஆங்கில மொழியில் ஆழ்ந்த புலமையும், அம்மொழியைச் சர்வகலாசாலை மாணவர் உட்பட உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்குப் போதிப்பதில் விசேட திறமையுமுடைய ஆசிரியரொருவரைத் தேடிக் கொண்டிருந்த நைஜீரிய நாட்டரசு திரு. சங்கரப்பிள்ளை அவர்களைத் தன் நாட்டிற்கு அழைக்க, அங்கே சென்றார். அவருடைய ஆற்றல் அங்கே முழுமையாகப் பரிணமித்து ''அனைத்துலக ஆசிரியர்'' "Universal Teacher" என்ற விருதையும் பெற்றுக் கொடுத்தது. ''ஊரான் பிள்ளையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊட்டி வளர்த்தால், தன் பிள்ளை தானே வளரும்'' என்னும் முதுமொழி இவருடைய விடயத்தில் நூற்றுக்கு நூறு உண்மையாகியது. பல்வேறு இன, மத, மொழிகளைச் சேர்ந்த சர்வதேச மாணவர்களுக்குத் தன் ஆற்றல் அனைத்தையும் திரட்டித் திரு. சங்கரப்பிள்ளை போதிக்க, அவர்களுடைய பிள்ளைகளும் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் அறிவும் ஆற்றலும் மிக்க நன் மாணாக்கர்களாக உருவாகினர். இரண்டு பிள்ளைகள் உயர் பதவிகளை லண்டனிலும், நியூயோக்கிலும் வகிக்க, மற்றைய இருவரும் லண்டனிலும், நியூயோக்கிலும் பல்கலைக்கழகப் படிப்பைத் தொடர மனநிறைவுடன் மீண்டும் தன் தாயகம் திரும்பியுள்ள திரு. சங்கரப்பிள்ளை வாழ்க்கையில் தான் அடைந்த உயர்வுக்கும் சிறப்புக்கும் தன் குலதெய்வமாகிய போதிப் பிள்ளையாரின் பேரருளே காரணம் என நம்புகின்றார். போதிப்பிள்ளையாரை நெஞ்சாரத் துதித்து அவருடைய அனுமதியைக் கோரியே எச்செயலிலும் ஈடுபடுகின்றார். தன் பதவிப் பொறுப்புக் காரணமாகவும் சொந்த நோக்கத்திற்காகவும் அறுபத்தேழு நாடுகளுக்கு அவர் பயணம் செய்ய நேர்ந்த வேளைகளிலும் அவருடைய உள்ளமோ அடிக்கடி தோப்பூருக்கு வந்து போதிப்பிள்ளையாரைத் தரிசித்துக் கொண்டிருக்கும்.

போதிப்பிள்ளையாரின் பேரருளை வியந்து பேசாத நாளெல்லாம் பிறவா நாளே எனக் கருதுமிவர் தான் பெற்ற இன்பத்தை நாமும் பெற வேண்டுமென்ற பெரு நோக்குடன் ''போதிப்பிள்ளையார் ஆற்றுப்படை''யை ஆக்கியுள்ளார்.

ஆங்கிலத்தில் ஆழ்ந்த புலமைகொண்டு, லண்டன் கவி அரங்கின் (London Poetry Society) உறுப்பினராய் ஆங்கிலத்தில் கவிபல புனைந்தும், கவிதைப் போட்டிகளில் பரிசுகள் பெற்றும் புகழீட்டிய திரு. பிள்ளை அவர்கள் தமிழ் யாப்பிலக்கணத்தைப் பட்டப் படிப்புக்குத் தமிழோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்துப் படித்தவரல்லர். இருந்தும் அழகு தமிழில், எளிய நடையில், இனிய நல்லோசையில் இவ்வாற்றுப் படையை ஆக்கியுள்ளார் என்றால், அதற்குப் போதிப் பிள்ளையாரின் பேரருளைத் தவிர வேறு என்ன காரணத்தைக் கூற முடியும்? ஆம் அந்தச் சங்கரன்பிள்ளை இந்தச் சங்கரப் பிள்ளையைத் தமிழ்க் கவிஞனாகவும் ஆக்கிவிட்டார்.

**"வள்ளி குமரனும் வள்ளலை மணந்திட**
**வெள்ள மதம்பொழி வேழமாய் வந்தவன்**
**பாத கமலம் பணிபவர் பாலுள**
**பாதக மலங்கள் பற்றறப் போக்குவான்**
**நினையும் வரமெலாம் நிறைவுற அருளுவான்"**

எனப் போதிப் பிள்ளையாரின் அருளாற்றலை விளக்கி அவரிடம் வருமாறு அழைத்து வழியையும் காட்டுகின்றார். திரு. சங்கரப்பிள்ளை.

பழைய அடியார் (பழவடியார்) பலர் அங்குள்ளனர். அவர்களுடன் புதிய அடியாராகிய (புத்தடியாராகிய) நாமும் சேர்ந்து போதிப்பிள்ளையாரைப் பாடிப் பரவுவோம்; பேரருளைப் பெற்றுய்வோம்.

**சி. சிவசரவணபவன்**
அதிபர்
வைத்தீஸ்வராக் கல்லூரி,
யாழ்ப்பாணம்
*17 - 8 - 1990*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

சிவத்தமிழ்ச் செல்வி, துர்க்கா துரந்தரி

## பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

வழங்கிய

# மதிப்புரை

**எப்போதகத்தும் நினைவார்க் கிடரில்லை**
**கைப்போதகத்தின் கழல்.**

தோப்பு என்னும் நாமங்கொண்ட சிற்றூர் அச்சுவேலிக்கு அணிசெய்வதாகும். போதிப்பிள்ளையார் திருக்கோவில் அமைந்திருப்பதால் தோப்புப் பதியில் ஒளிமயமான வாழ்வு பெற்று மக்கள் வாழ்வாங்கு வாழ்கின்றனர். அருளும், பொருளும், அமைதியும், ஆனந்தமும் இவ்வூர் மக்களிடையே காணும் சிறப்புக்களாகும். இவர்களில் ஒருவராய், விநாயக பக்தராய், நாடறிந்த நல்லறிஞராய், இருமொழிப் புலமை படைத்தவராய் விளங்கி வருபவர் செம்மனச் செல்வர் இ. சங்கரப்பிள்ளை அவர்கள். வாக்கும், செயலும் ஒன்றாக அமையும் சிறப்பு இவரிடத்தில் காணும் பெரும் பண்பாகும். "**பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனிசிறந்தனவே**" என்ற கோட்பாட்டை முழுமையாகப் பின்பற்றுபவர் இப் பெரியார். இவருடைய தந்தையார், பாட்டனார் ஆயிரம் பிறைக்கு மேல் தரிசித்து வாழ்ந்து இறைபதம் எய்தியவர்கள். பிள்ளையாரின் அருளை பரிபூரணமாகப் பெற்றமையால் ஆத்மீக அனுபவம் இவர்கள் குடும்பத்துக்கு நிரம்ப உண்டு. அதற்கு ஒரு பெருஞ் சான்றாக விளங்குவதே போதிப்பிள்ளையார் ஆற்றுப்படை என்னும் இந்நூல்.

தமிழிலுள்ள பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு வகையில் அடங்கும். அவற்றுள் ஆற்றுப்படை என்பதுமொன்று. ஆற்றுப்படை என்னுஞ் சொல் வழிப்படுத்தல், வழி கூறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பி வைத்தல் என்ற பொருளைத் தரும். "முருகாற்றுப் படுத்த உருகெழுவியன் நகர்" என்ற பாடல் வரிகளினல் முருகனை வருமாறு வழிப்படுத்தின அச்சம் பொருந்திய அகன்ற கோயில் என்ற பொருளை இது புலப்படுத்துகிறது.

**கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**
**பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்**
**சென்று பயன் எதிரச் சொன்ன பக்கம்**

என்பது ஆற்றுப்படைக்கு இலக்கணம் கூறும் தொல் காப்பியச் சூத்திரமாகும்.

ஓர் அரசன் அல்லது வள்ளல் என்பவரிடஞ் சென்று பரிசு பெற்றுத் திரும்பிய ஒரு புலவன் வழியில் தன் போன்ற மற்ெருரு புலவனைச் சந்தித்து தான் சென்ற இடம், புகழ்ந்து பாடிய விதம், பாடப்பட்டவருடைய பண்புகள், அவர் கொடுத்த பரிசில்கள் ஆகியவற்றை எடுத்துக் கூறி, பரிசில் பெற விரும்பும் இப் புலவரை ஆற்றுப்படுத்தலே இப்பிரபந்தத்தின் ஒழுங்காகும். அத்துடன் இப்புல வருக்கும், தனக்குக் கிடைத்த பேறுகள் அனைத்தும் கிடைக்கும் என்பதையும் எடுத்துக்கூறி ஆற்றுப்படுத்தலே இவ்விலக்கியத்தின் தனிச்சிறப்பாகும்.

தோப்புப் பிள்ளையார் ஆற்றுப்படையும் இவ்வொழுங் கினின்றும் வழுவாது அமைந்துள்ளது. முருகப்பெருமான் பால் ஆற்றுப்படுத்தும் திருமுருகாற்றுப்படைபோன்று விநாயகப் பெருமானிடத்தில் ஆற்றுப்படுத்திப் பாடியுள் ளார் ஆசிரியர். தான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்ற புனிதமான நோக்கோடு எழுந்ததே இப் பிரபந்தம்.

முதலிலே இவ்வாலய வரலாற்றைத் தான் பெற்ற அனுபவ ரீதியாகக் காட்டியுள்ளார் ஆசிரியர். 'தோப்பு' என்னும் பெயருக்குப் பொருத்தமாகக் கவினுறு சோலை களாலும் வற்ருத மருதங் குளத்தாலும் சிறப்புப்பெறும் இக்கிராமத்தின் எழிலை நன்கு எடுத்துக் காட்டியமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரின் மண்வாசனைப் பற்றை விளக்குகிறது. ஆலயத்தைத் தரிசிக்க விரும்புவோர் வழிகண்டு செல்வதற்கேற்ற வகையில், இடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தல வரலாறுகளுக்கு இது மிகவும் முக்கியமான குறிப்பாகும். வயலும் வயல் சார்ந்த இடமுமே மருதம் என்பர். இந்நிலத்து வாழ் மக்களின் நேர்த்திகள் பற்றிய விபரங்கள் தொல்காப்பியம், சங்கஇலக்கியம் போன்ற நூல்களில் காட்டப்பட்டதுபோன்று இந்நூலாசிரியரும் தோப்புவாழ் மக்களின் வாழ்வோடு இணைந்த தெய்வ வழிபாட்டைக் காட்டியுள்ளார். தமது விவசாய உழைப்பின் ஒரு பகுதியைப் போதிப் பிள்ளையாருக்கே ஒதுக்கி வாழ்ந்த சிறப்பை ஏனைய ஊர் மக்களும் பின்பற்றக்கூடிய வகையில் இவர் கருத்து அமைந்துள்ளது.

அந்நியர் ஆட்சிக்காலத்திலேயே வழிபடுதெய்வமாக வைத்துப் போற்றப்பட்ட இக் கோயிலின் பழமையைத் தமது பூர்வீகத்தாரின் ஆத்மீக வாழ்வோடு இணைத்துக் கூறியுள்ளார் இந்நூலாசிரியர். மேலும் பூசகர்கள், பூசை முறைகள், நித்திய நைமித்திய ஒழுங்குகள், பிள்ளையாரின் அற்புதங்கள், அரசமரத்தின் தெய்வீகம் ஆகியவற்றை ஆசிரியர் காட்டிச் செல்லும்போது நாஸ்திகர்கூட ஆஸ்திகராக இடமுண்டு என்றே கூறலாம்.

அடுத்து நாம் காண்பது ஆற்றுப்படைப் பாடலாகும். ஆற்றுப்படையின் தொடக்கம் மங்கலமாக ' சீரும் திருவும் ' என்று ஆரம்பிக்கிறது. ஆன்ம பக்குவம் நோக்கித் தான் காத்திருந்தமையை மிகவும் அழகாகவும் எளிமையாகவும் முதலில் பாடியிருப்பது ஒரு புதுமையான அமைப்பாகும். அவையடக்கமாகப் பாடித் தன்னை ஒரு சாதாரணனென்றும் '' சித்தனே, பத்தனே, சிறந்தவனே '' அல்ல என்றும் வெளிப்படுத்தலும், தன் வாழ்வில் ஈழநாட்டையும் சோழநாட்டையும் இணைத்துப் பேசியதும் வரவேற்கத்தக்கதாகும். போதிப்பிள்ளையார் அடக்கப்படும் களிறு அல்ல; அவரே அங்குசத்தால் ஆன்ம கோடிகளை அடக்குபவர் என்ற தத்துவ உண்மையை நல்லபடி காட்டி நூலைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடருகிறார். இவ்வாறு போதிப்பிள்ளையாரிடம் தான் பெற்ற பேற்றினைத் தன்னை நாடிவந்த புலவனுக்கும் கிடைக்க வேண்டுமென்று தோப்பு நோக்கி ஆற்றுப்படுத்துகிறார். இங்கே "எம்பியே எண்ணித்துணிமதி" என்று விளித்துப் பேசுவது ஒரு சிறப்பம்சமாகும். ஈழத்துப்பாடல் பெற்ற தலங்களையும் ஏனைய சிறந்த தலங்களையும் அறிமுகப் படுத்திச் செல்லும் ஆசிரியர் பாட்டுடைத் தலைவனை போதி விநாயகரின் அற்புதங்களைக் கூறி, மேலும் இவ்வாலயத்துக்குச் செல்லும் நெறியையும் காட்டி வழிபடும் முறைகளையும் சொல்லி, அங்கு கடமையாற்றும் மெய்யடியார்களையும் பாராட்டி ஆற்றுப்படைப் பாடலை நிறைவு செய்கிறார்.

"சஞ்சலம் இலாதவன் தாள் சரணடைவீர்
நெஞ்சகம் நிரம்ப நீடருள் நிறையுமே"

என்ற நிறைவு வாக்குகள் எம்மையும் அந்த விநாயகனிடத்தில் ஆற்றுப்படுத்துகிறது என்பதில் மிகையொன்றுமில்லை.

நூலாசிரியர் சங்கரப்பிள்ளை அவர்களின் இத்தூய பணி மேன்மேலும் ஓங்குக என்று திருவருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**தங்கம்மா அப்பாக்குட்டி**

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தலைவர்
தெல்லிப்பழை.
23 – 10 – 1990.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

போதிப் பிள்ளையார் துணை

# பதிப்புரை

பக்திச் சுவைப் பனுவல்களைப் பதிப்பிப்பதும் போதிப் பிள்ளையார் கோவிற்றிருப்பணிச் சபையின் முக்கிய நோக்கங்களில் ஒன்று. இந்நிலையில் எங்கள் சபைத் தலைவர் திரு. இ. சங்கரப்பிள்ளை அவர்களின் ''போதிப் பிள்ளையார் ஆற்றுப்படை'' என்னும் பக்திச்சுவை நனி சொட்டும் நூலினை எமது கன்னிப்படைப்பாக வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

பன்னிரு திருமுறைகள் போன்ற பக்தி நூல்கள் எமது பக்தி உணர்வைப் பெருக்குவதற்குப் பெருந்துணை புரிகின்றன. இந்த வகையில் எழுந்ததே போதிப்பிள்ளையார் ஆற்றுப்படையும். கலியுகத்தில் அதர்மங்கள் மலிந்து காணப்படும் இக்கால கட்டத்தில் இறைவனின் புகழ் பேசும் நூல்களில் நம் மனத்தைச் செலுத்துவதே சிறந்த உபாயம்.

எங்கள் சபை இந்நூலைப் பதிப்பித்து வெளியிட அநுமதி அளித்த அனைத்துலக ஆசிரியர் அவர்களுக்கு நாம் மிகுந்த நன்றிக் கடப்பாடுடையோம். அவர் மேன் மேலும் இன்னோரன்ன நூல்களைச் சைவ உலகுக்குத் தந்துதவ எல்லாம் வல்ல போதிப் பிள்ளையார் அருள் புரிவாராக!

நூல்களை அழகுறப் பதிப்பிப்பதில் கைவந்த சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தார் இந்நூலையும் அழகுறப் பதிப்பித்துள்ளார்கள். அவர்களுக்கும் நாம் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சமயாபிமானிகளும், அறிஞர்களும் மற்றோரும் இந்நூலை ஆதரித்து எமது சபை மேலும் இத்தகைய முயற்சிகளில் ஈடுபட ஊக்குவிப்பார்களென எதிர் பார்க்கின்றோம்.

சுபம்

போதிப் பிள்ளையார் கோவில்
திருப்பணிச்சபை,
தோப்பு,
அச்சுவேலி.
29-10-1990.

**செ. தி. யோகநாதன்**
(கௌரவ செயலாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# நூலாசிரியரின் முகவுரை

ஆற்றுப்படை என்பது, ஒரு புலவர் ஒரு கொடையாளி யின் பால் தாம்பெற்ற பெருஞ் செல்வத்தை அது பெற விரும்பும் எதிர்வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி அவ்வள்ள லுடைய இயல்பும், இடமும், அவனையடையும் வழியும் உணர்த்தி, அவரும் அங்கே சென்று தாம் பெற்றவை யெல்லாம் பெறுமாறு வழிப்படுத்தல் என்னும் பொரு ளமையப் பாடும் ஒருவகை நூல். பத்துப்பாட்டுக்களுள் ளும் முதல் நான்கும் திருமுருகாற்றுப்படை, பெரும்பா ணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பொருநராற்றுப் படை என்னும் ஆற்றுப்படை நூல்களே. முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட் டினப்பாலை, மலைபடுகடாம் என்பனவே ஏனைய ஆறு பாட்டுக்களும்.

ஆற்றுப்படை என்றவுடன் திருமுருகாற்றுப்படையின் நினைவே சைவ மக்களுக்கு எழும். முருகப்பெருமானின் அழகையும், அருள்வளத்தையும் விளக்கி அப்பெருமான் அமர்ந்திருக்கும் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்று தோறாடல், பழ முதிர்சோலை ஆகிய ஆறுபடை வீடுகளுக்கும் அடியார்களை ஆற்றுப்படுத்தும் வகையில் நக்கீரதேவனார் திருமுருகாற் றுப்படையினைப் பாடியருளினார்.

சங்ககாலத்துக்குப்பின் வடமலையப்பபிள்ளை என்னும் வள்ளலைப் பாட்டுடைத் தலைவனாக வைத்துப் புலவராற் றுப்படை என்னும் ஆற்றுப்படை ஒன்றும் ஆயிரத்து அறு நூற்று இரண்டாம் ஆண்டில் தமிழ் நாட்டில் பாடப்பட் டது. பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை ஆக்கிய காதலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாற்றுப்படையும் சுன்னுகம் குமாரசுவாமிப் புலவரின் மகன் திரு. முத்துக்குமாரசாமிப்பிள்ளை இயற்றிய காசி யாற்றுப்படையும் இலங்கையில் வெளிவந்த ஆற்றுப்படை நூல்களே.

சங்ககாலத்திலும்சரி அதற்குப் பிந்திய காலத்திலும்சரி வரையாது கொடுத்த வள்ளல்கள் பலர் இருந்தனர் என்பது உண்மை. ஆனால் பொருளாசையும் சுயநலமும் மிகுந்த இக்காலத்தில் வள்ளன்மை என்பது முயற் கொம்பாகிவிட்டது. எனவே மனிதனுக்கு மனிதன் ஆற்றுப்படை பாடும் முறை மலையேறிவிட்டதெனலாம்.

நவீன மனிதனுக்கு அருள் வள்ளலான கடவுள் ஒருவரே வள்ளலாய் என்றும் இருக்கின்றார். எனவேதான் இந்த ஆற்றுப்படையை, அடியேனை அனைத்துலக ஆசிரியனாக ஆக்கி வாழவைத்த போதிப் பிள்ளையாருக்குப் பாடியுள்ளேன். தமிழ்நாட்டின் தலைநகராம் சென்னையிலுள்ள; டாக்டர் ராதாகிருஷ்ணன், ராஜாஜி போன்ற மேதைகள் உயர்கல்வி பயின்ற சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றும், சோழ நல்நாட்டின் திருக் கண்ணபுரத்து அத்தான் அருணசலத்தினதும், தங்கச்சி சாந்தாவினதும் மூத்த மகள் வானதியை எனது மூத்த மகன் சங்கரசேய்க்கு மணம்முடித்துவைத்து மருமகளாக்கியும், வேறு பலவிதமான தொடர்புகளைத் தமிழ் நாட்டுடன் ஏற்படுத்தியும் தமிழ் நாட்டுடன் உரிமைகோரும் அடியேன் எனது ஆற்றுப்படையில் ஆற்றுப்படுத்தும் அடியானைத் தமிழ் ஈழ அடியாளுகவும், ஆற்றுப்படுத்தப்படும் அடியானைத் தமிழ்நாட்டு அடியானுகவும் கற்பனைசெய்து, பாட்டுடைத் தலைவனுகப் போதிப்பிள்ளையாரை வைத்துப் பாடியுள்ளேன்.

போதிப்பிள்ளையார் அடியேனுக்குக் காட்டிய அறக் கருணைக்கோர் அளவில்லை. யான் பெற்ற கருணையை என் வழி மரபினரும் நினைவுகூரவேண்டுமென்றே எனது இளைய மைந்தனுக்குச் சங்கரபோதி என்னும் நாமத்தைச் சூட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ளேன். எனது இறுதி மூச்சுக்கு முன்னர் போதிப்பிள்ளை யார் மீது ஆற்றுப்படை ஒன்றும் பாடிமுடிப்பது பெரும் மன நிறைவத்தரும். எனது பட்டப் படிப்புக்குத் தேனினு மினிய என் தாய் மொழியாம் தமிழையும் ஒரு பாடமாகத் தேர்ந்தெடுத்ததும், தமிழில் மட்டற்ற பற்றுடையேன் என் பதும் உண்மை. ஆயினும் வயிறு வளர்க்கவும், அனைத் துலகைச் சுற்றிவரவும் உதவிபுரிந்த ஆங்கிலத்தையும் என்னால் புறக்கணிக்க முடியாது. லண்டன் மாநகரின் கவி அரங்கின் (London Poetry Society) உறுப்பினர்களில் ஒரு வனாய் அமர்ந்து ஆங்கிலக் கவிதைகள் பல புனைந்தமை வியப்பிற்குரிய ஒன்றல்ல. ஆனால் தமிழ் யாப்பிலக்கணம் படிக்காத சிறியேன் பிள்ளையார் பேரில் ஆற்றுப்படை பாட முன்வந்தமை பிள்ளையாரின் திருவிளையாடல்களில் ஒன்றெனலாம்.

**''என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே''**

எனும் திருமூலர் வாக்குக்கமையவே ஆற்றுப்படை பாடி யுள்ளேன் போலும்.

ஆற்றுப்படையை இயற்றி அருளுரை போன்ற உரை களைப் பெற்ற பின்னரே எதிர்பாரா வகையில் பிள்ளையாருக்குத் தமிழில் அர்ச்சனை செய்ய உதவும் முறை யில் நூற்றெட்டு வரிகளாலான ''போதி அர்ச்சனை'' என்னும் நூற்றெட்டுத் திருநாமஞ்சலியையும் இயற்றி னேன். எனவே பல்வேறு நல்லுரைகளைத் தந்துதவிய அன் பர்கள் இந்த அர்ச்சனை பற்றி எழுதச் சந்தர்ப்பம் இல் லாமல் போய் விட்டது. எனது தமிழ் அர்ச்சனையைக் கொடித்தம்பத்தடியில் அமர்ந்திருக்கும் வலம்புரி விநாய கருக்கு எம்போன்ற பிராமணரல்லாதோர் செய்யலாம். இதைக்கொண்டு அடியேன், தொன்றுதொட்டு நிலவிவரும் வடமொழி அர்ச்சனைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக எவர் தானும் எண்ணக்கூடாது. வடமொழித் தேர்ச்சி இல்லாத கோடானுகோடி பக்தர்கள் தாங்கள் தமிழில் செய்யும் அர்ச்சனையின் பொருளை உணர்ந்து தாங்களே நூற்றெட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை மலரிட்டுப் பிள்ளையாருக்கு அர்ச்சனை செய்வது சாலமும் நன்று. "சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக்கீழ் பல்லோரும் ஏத்தப் பணிந்து" என்னும் சிவபுராணக் கருத்து அடியேனின் கருத்தை வலியுறுத்தும் என்பதில் எள்ளளவு சந்தேகமுமில்லை.

எமது குலதெய்வமாய் அமர்ந்து எமது முன்னோர்க்கும் வழித்தோன்றல்களுக்கும் மௌன போதனை செய்து வந்துள்ளார் போதிப்பிள்ளையார். அவரது போதனையினாலேயே கல்விக் கடலெனக் கொள்ளப்பட்ட எனது சிறிய தகப்பனார் காலஞ் சென்ற திரு. K. S. அருள்நந்தி **M. Sc. (London)** அவர்கள் இலங்கை கல்வித் திணைக்களத்தின் கடைசி ஆங்கிலேயக் கல்வி இயக்குனரையடுத்து முதல் இலங்கைக் கல்வி இயக்குனராக வரமுடிந்தது. அவருக்குப் பின்னரும் முன்னரும்கூட எங்கள் கோவில்பற்றுடன் தொடர்புடைய எத்தனையோ அறிஞர்களும் கல்விமான்களும் பிள்ளையார் அருளால் தோன்றியுள்ளார்கள். எங்கள் தோப்பைக் கல்விப் பூங்காவாகத் தந்த கருணை வள்ளல் போதிப்பிள்ளையாரே. எனவே முதற்கண் அவருக்கே அடியேனின் நன்றி உரியது.

எனது ஆற்றுப்படையில் நீக்கவேண்டிய சிலவற்றை நீக்கியும், சேர்க்கவேண்டிய சிலவற்றை சேர்த்தும் ஆற்றுப்படையை அழகுற அமைத்துத்தந்த ஆவரங்கால் அறிவுசால் பண்டிதர் ச. சுப்பிரமணியம் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி. அவர் தந்த பிரார்த்தனை உரைக்கும், பிள்ளையார் திருவூஞ்சற் பதிகத்துக்கும் மேலும் எனது நன்றியையும் திருப்பணிச்சபையாரின் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

> **"அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
> பூரியார் கண்ணும் உள."**

அருட்செல்வரான யாழ்ப்பாணம் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசாரிய சுவாமிகளை அவரது அருள் நிரம்பிவழியும் அருளுரைக்காகக் கைகூப்பி வணங்குகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற ஒழுங்குக்கேற்ப எனது மாதாவுக்கும் பிதாவுக்கும் என்னுலான பணியினைச் செய்து அவர்கள் சிவபதமடைந்தபின் அவர்களுக்கே எனது முதல் படைப்பான "Universal Teacher" எனும் ஆங்கில நூலினையும் சமர்ப்பணம் செய்துள்ளேன். எங்கள் ஆலயக் குரு சிவஸ்ரீ ச. கௌரிசங்கரசர்மா அவர்களை உரிய முறையில் மதித்தும், ஆதரித்தும், அன்பு காட்டியும் வரும் அடியேன் அவர் மனமுவந்தளித்த ஆசியுரையினை உளங் கனிந்த நன்றியுடன் சிரம்தாழ்த்தி ஏற்றுக்கொள்கின்றேன்.

"குணநலம் சான்ருேர் நலனே பிறநலம்
எந்நலத்து உள்ளதூஉம் நன்று"

எனும் தெய்வப் புலவரின் குறட்பாவுக்கிணங்க ஒழுகியும், என்னிலும் பதினேழு வயது மூத்தும், அறிவிலும் அனுபவத்திலும் பன்மடங்கு உயர்ந்தும், தமிழ் நாட்டுச் சான்ருேர் வரிசையில் முதலிடம் வகித்தும், ஞாயிறு போன்று காட்சிதரும் எனது தமிழ்நாட்டுக் கெழுதகைமை நண்பர் கலைமாமணி திருக்குறளார் வீ. முனிசாமி அவர்கள் தந்துதவிய வாழ்த்துரையை நான் சங்கநிதி, பதுமநிதி இரண்டிலும் மேலாக மதிக்கின்றேன். தலைசிறந்த இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேருவின் காலத்துப் பாராளுமன்றத்தில் (லோக் சபை) உறுப்பினராகக் கடமை புரிந்த காலந் தொட்டே அவர் எனது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய சான்ருேஞக இருந்து வந்துள்ளார். எனவே அவரின் வாழ்த்துரையை "தமிழ் நாட்டுச் சான்ருேன் வாழ்த்துரை" எனும் பேரில் உளங்கனிந்த நன்றியுடன் ஏற்றுக்கொள்கின்றேன்.

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியாகிய எங்கள் போதிப்பிள்ளையார் பேரில் சிறியேன் எழுதிய வரலாற்றினையும், ஆற்றுப்படையினையும் பார்வையிட்டு அறிமுகவுரை வழங்கக்கூடிய அதி உயர்ந்த தகமை பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் அவர்களுக்கே உரியது என்ற நம்பிக்கையின் பேரில் அவரைச் சிறியேன் அணுக, அவர் உளம்மகிழ்ந்து உதவிய அறிவுசால் அறிமுகவுரைக்காக எனது இதயபூர்வமான நன்றியை நவில்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது பல்கலைக்கழகச் சகபாடியும், நண்பனுமான திரு. சி. சிவசரவணபவன் என்பவரையே எனது நூலுக்கு அணிந்துரை எழுதுமாறு வேண்டினேன். பிறப்பினாலும், செந்தண்மை பூண்டொழுகலாலும் அந்தணனான என் நண்பன் தயக்கமெதுவுமின்றி அப்பணியினை ஏற்றமைக்காக எனது மனவுவந்த நன்றி. ''கலைச் செல்வி'' எனும் மாத வெளியீட்டுச் சஞ்சிகையின் ஆசிரியராகவும், ''சிற்பி'' எனும் புனைபெயரோடு பிரபல எழுத்தாளராகவும் கடமை புரிந்த நண்பரின் புகழுரைகட்கு அடியேன் அருகதை யுடையேனோ என்பது காத்திருந்து அறியவேண்டிய ஒன்று.

''தங்கம்மா'' என்னும் இடுகுறிப் பெயர், காரணப் பெயராகவும் அவருக்கு அமைந்துவிட்டதென்று கூசா மலே எவரும் எண்ணக்கூடிய வகையில் அப்பெயரைத் தாங்கி நிற்கும் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர் களுக்கு எனது நன்றிக்கடன் எனும் பெருங்கடன் தீர்க்க முடியாத கடனெலாம். தமிழும் சைவமுமே அம்மையாரில் கமழும் நறுமணம். நான் சென்றுள்ள நாடுகள் பலவற்றி லும் கூட அவரின் தங்கத்தமிழ்த் தொண்டும் சமயத் தொண்டும் மிளிர்வதைக் காணமுடிந்தது. அம்மையாரின் மதிக்கொணா மதிப்புரைக்காக மீண்டும் நன்றி.

இந்நூலின் அச்சுப்பிரதிகளைச் சரிபார்த்தும், அச்சேற்று வித்துத் தந்தும் எனக்குப் பேருதவி புரிந்த எனது நாற் பதாண்டுக்காலக் கெழுதகைமை நண்பன் கலைப்பேரரசு A. T. பொன்னுத்துரை அவர்களுக்கும் எனது நன்றி. எனது அன்புப் பெற்றோரினால் அங்கீகரிக்கப்பட்ட நட்பை யுடைய எனது நண்பன் அவர்களின் நட்பை நான் மிகவும் பெரிதாகப்பேணி வந்துள்ளேன்.

இந்நூலினைப் பணத்திற்காக எழுதவேண்டுமென்ற எண்ணம் என் கனவிலும்சரி எழவில்லை. இந்நூலின் விற் பனையால் வரும் நிதியனைத்தும் போதிப்பிள்ளையாரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்த் திருப்பணிக்கேயுரியது. எனவே இந்நூற் பதிப் புரிமையைப் போதிப்பிள்ளையார் கோவில் திருப்பணிச் சபைக்கே வழங்கியுள்ளேன். எனக்குச் சொல்லொணு ஒத் துழைப்பு நல்கியும், நூற்பதிப்புரிமையையும் பதிப்புரிமை யோடுகூடிய பொறுப்பினையும் ஏற்று என்னை மகிழ்வித்தும் வந்துள்ள போதிப்பிள்ளையார் திருப்பணிச்சபையினர்க்கு எனது உளம் கனிந்த நன்றி உரித்தாகுக! நேர்மைக்கும் நிதி நிர்வாகத் திறமைக்கும் பேர் போன பொருளாளர் திரு. க. சுப்பிரமணியம் அவர்கட்கும், ஊக்கமும் சுறுசுறுப்பு முள்ள செயலாளர் திரு. க. செ. யோகநாதன் அவர் கட்கும் எனது பிரத்தியேக நன்றியினைத் தெரிவிக்கின் றேன்.

சுன்னுகம் திருமகள் அழுத்தகத்தாருடன் எனது தொடர்பு ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தைந்தா மாண்டு தொட்டே ஏற்பட்டுவிட்டது. முதலில் அமரத்துவ மடைந்த என் தந்தையின் பாதத்திலும், பின்னர் என் அன்னையின் பாதத்திலும் நான் இயற்றிப் பதிப்பித்துச் சாற் றிய நினைவுமலர்களை அழகுற அச்சிட்டுத் தந்த நன்றியை இன்றும் மறந்திலேன் எனது நண்பன் கலைப்பேரரசு பொன் னுத்துரையும் திருமகள் அழுத்தகத்தில் அன்று முக்கிய பணிபுரிந்த அவரின் சகலன் திரு. மு. சபாரத்தினம் அவர் களுமே முன்னின்று அப்பணிகளை இனிது நிறைவேற்றித் தந்தனர். இன்றும் தெய்வீகம் கமழும் இந்நூலினை இவ் வளவு அழகாக அச்சிட்டுத் தந்தமைக்காகத் திருமகள் அழுத்தகத்தாருக்கு எனது மனமார்ந்த நன்றி உரித்தாகுக!

இவ்வாற்றுப்படை நூலின் அழகுக்கு அழகு செய்வ தாயும், தெய்வீகத்திற்குத் தெய்வீகம் சேர்ப்பதாயும் உள்ளது போதிப்பிள்ளையாரின் திருவுருவப் படம். இப் படத்தினைத் திறம்பட ஆக்கித் தந்த யாழ்ப்பாணம் நல்லூர் சித்திராலய புகைப்பட நிறுவனத்தினர்க்கும், அவர் களுக்கும் எனக்குமிடையில் அன்பெனும் இணைப்புச் சங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிலியாக நின்று பேருதவி புரிந்த அகில இலங்கைக் கம்பன் கழக அமைப்பாளர் நண்பன் திரு. இ. ஜெயராஜ் அவர் கட்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். இந்நூல் வெளியீட்டு விழாவிற் கலந்து தலைமை தாங்கியும் வெளி யீட்டுரை நிகழ்த்தியும், ஆய்வுரை வழங்கியும், சிறப்புப் பிரதிகள் பெற்றும் இந்நூலுக்கு நல்வாழ்வளித்த பெரு மக்களெல்லோர்க்கும் என் உளங்கனிந்த நன்றி.

இந்நூலின் வாசகர்களுக்கும் மற்றும் ஏனையோர்க்கும் போதிப்பிள்ளையாரின் அருள் பாலிக்க வேண்டி அவரை வேண்டுகின்றேன்.

**இ. சங்கரப்பிள்ளை**

விடுதலைக் கோயில்,
ஆஸ்பத்திரி வீதி (தோப்பு),
அச்சுவேலி.
3 – 12 - 1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# தினசரி தியானம்

போற்றியோம் போதி போற்றி, சயசய போற்றி போற்றி.

— அனைத்துலக ஆசிரியர்

வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

— திருவள்ளுவர்

பொய் சேர்ந்த சிந்தை புகாதாய் போற்றி
போகாது என் உள்ளத் திருந்தாய் போற்றி.

— அப்பர்

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்ற தொன்றென்பால்?

— மாணிக்கவாசகர்

கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல் போலெனக்கு
என்றிரங்குவாய் கருணை எந்தாய் பராபரமே?

— தாயுமானவர்

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

— திருமூலர்

தித்திக்கும் தெள்ளமிர்தை சித்தாந்தத்துப் பொருளை
முத்திக்கு வித்தை முதனினைப்ப தெக்காலம்?

— பத்திரகிரியார்

ஈசனெனக் கருதி யெல்லா வுயிர்களையும்
நேசத்தால் நீ நினைந்து கொள்.

— ஔவையார்

உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்.

— இராமலிங்க அடிகள்

ஆவியொடு காய மழிந்தாலும் மேதினியில்
பாவியென்று நாமம் படையாதே — மேவியசீர்
வித்தாரமுங் கடம்பும் வேண்டாம் மடநெஞ்சே
செத்தாரைப் போலே திரி.

— பட்டினத்தடிகள்

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

# போதிப் பிள்ளையார் கோவில் வரலாறு

இறைவனே வரலாற்றுக்கு அப்பாற்பட்டவன். அவன் ''ஆதியுமந்தமுமில்லா அரும்பெருஞ் சோதி.'' ''முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருள்.'' இறைவன் ஒருவனாக இருந்தபோதிலும் இந்துக்கள் அவனைச் சிவன், சக்தி, விநாயகர், முருகன் என்றெல்லாம் பல்வேறு வடிவங்களிற் காண்கின்றனர்.

இறைவன் வரலாற்றுக்கு அப்பாற்பட்டவனாக இருந்தும் மக்கள் தம் மனநிறைவுக்காகத் தத்தம் பகுதியிலுள்ள கோவில்கள்பற்றிய குறிப்புக்களை வரலாறுகளாக எழுதுவது வழக்கம். அவ்விதிக்கிணங்கவே தோப்புப் போதிப் பிள்ளையார் வரலாறும் எழுதப்பட்டுள்ளது.

தோப்பு என்னும் காரணப் பெயரையுடைய அழகொழுகும் சின்னஞ்சிறு கிராமம் அச்சுவேலியின் தெற்கு எல்லைப் பகுதியாக இருக்கின்றது. யாழ்ப்பாணம்—பருத்தித்துறை வீதியானது ஆவரங்கால்—அச்சுவேலி எல்லையில், அச்சுவேலி பேருந்து நிலையத்துக்கும் வல்லைக்கும் பிரியும் முச்சந்தியில் நின்று மேற்குப்புறமாகப் பார்க்கும்போது, பச்சைப்பசேலென்ற தோட்டங்களையும், வயல்களையும், தென்னை, பனை, மா, பலா, கமுகு, வாழை மரங்களையுங் கொண்ட உண்மைத் தோப்பாகக் காட்சி அளிக்கிறது தோப்புக் கிராமம். இக்கிராமத்திலுள்ள மருத நிலத்திலேயே வயல்களின் ஓரத்தில் போதிராப்பிட்டி என்னும் மேட்டுநிலத்தில் அமைந்துள்ளது போதிப் பிள்ளையார் ஆலயம். மருதங்குளம் எனும் வற்றுத குளம் இக்கோவிலுக்குத் தென்புறமாக ஒரு கல்லெறி தொலைவில் இருக்கிறது. மாரிகாலத்தில் வயல்களிலுள்ள வெள்ளம் பெருகிக் கோவிலின் புற வீதியைத் தொட்டு வணங்கும் காட்சி கடல்நீர் தொட்டு வணங்கும் திருச்செந்தூர் முருகன் கோவிற் காட்சியை எமக்கு நினைவூட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐவகை நிலங்களிலொன்ருன இம் மருதநிலத்தில் வாழும் மக்கள் பூர்வீக காலந்தொட்டு வேளாண்மைத் தொழிலேயே செய்துவரும் வேளாண் மக்கள். அவர்கள் எல்லோரையும் இறுகப் பற்றிப் பிணைத்துநிற்பவர் போதிப் பிள்ளையாரே. வருடந்தோறும் ஆடி மாதத்தில் விவசாயிகள் தத்தம் வயல்களை உழுது பசளேஇட்டுப் பண்படுத்தி ஆவணி மாதத்தில் பிள்ளையாரை வணங்கி நெல் விதைப்பார்கள். தை பிறந்ததும் நெல்லை அறுவடை செய்வார்கள். அறுவடை செய்யுமுன் புதிர் எடுத்துக் குற்றிய பச்சை அரிசியோடு பசுப்பாலும், பயறும், சர்க்கரையும், கருப்பஞ் சாறும் கலந்து பொங்கியும், பசு நெய்யில் மோதகம் அவித்தும் பிள்ளையாருக்குப் படைப்பார்கள். அறுவடையின் போது பிள்ளையாருக்குத் தங்களாலியன்ற நெல்லையும் காணிக்கையாகக் கொடுப்பார்கள். நெற்செய்கையை அடுத்து ஒருசிலர் பாசிப்பயறும், ஏனையோர் வெண்காயமும் பயிரிடுவார்கள். அவற்றின் அறுவடையின்போதும் பிள்ளையாருக்கு அப்பொருட்களின் ஒருபகுதியைக் காணிக்கையாக வழங்குவார்கள். பிள்ளையாருக்கு மாதந்தோறும் வருடந்தோறும் அன்பளிப்பாகவும், சந்தாப்பணமாகவும், உள்ளூரிலும் உலகின் பல்வேறு பாகங்களிலும் வசிக்கும் தோப்பு மக்களிடமிருந்து பணம் வந்துகொண்டேயிருக்கிறது. பிள்ளையாருக்குச் சொந்தமான மருதங்குள வயலொன்றிலிருந்தும் அவ்வயலைக் குத்தகைக்குச் செய்யும் செட்டி வேளாண் மக்களிடமிருந்து குத்தகைப்பணம் வருடந்தோறும் வந்துகொண்டிருக்கிறது. எனவே அவரைப் பணக்காரப் பிள்ளை என்றே கூறலாம்.

போதிப் பிள்ளையார் போத்துக்கீசர் காலத்துக்கு முன்பிருந்தே தோப்பு மக்களின் வழிபடு குலதெய்வமாக இருந்துவந்துள்ளார் என்பதை ஒருசில ஆதாரங்கள்மூலம் அறியலாம். ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தைந்தாம் ஆண்டு ஆவணி மாதம் இருபத்தேழாம்நாள் எனது தந்தையார் திரு. இளையதம்பி அவர்கள் தனது தொண்ணூற்று மூன்ரும் வயதில் சிவபதம் அடைந்தார். அவரது தந்தையார் திரு. வல்லிபுரம் அவர்கள் ஆயிரத்துத் தொளாயி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரத்து ஐம்பத்துமூன்ரும் ஆண்டு வைகாசி மாதம் இருபத்தேழாம் நாள் தனது நூற்றிரண்டாம் வயதில் இயற்கை எய்திஞர். அவரது தந்தையார் திரு. சின்னத்தம்பி அவர்கள் நூற்றொரு ஆண்டுகளாகவும் பாட்டனர் திரு. சிவத்தம்பி அவர்கள் தொண்ணூற்றேழு ஆண்டுகளாகவும் வாழ்ந்தனர் என்பதை எனது பேரனர் திரு. வல்லிபுரத்திடமிருந்து அறியமுடிந்தது. திரு. சிவத்தம்பி என்பவரின் தந்தைவழிப் பாட்டன் சிறுவனய் இருந்தபோழ்து மண்ணுலான சுவர்களையும், தென்னேலையால் வேயப்பட்ட கூரையையுமுடைய கோவிலாகத் தோப்புப் போதிப்பிள்ளையார் கோவில் இருந்ததாக எனது பேரனர் திரு. வல்லிபுரத்திடமிருந்து மேலும் அறியமுடிந்தது. இக்கோவிலின் தல விருட்சமாய்க் கோவிலின் முன்றிலில் மிளிரும் மிகவும் பருத்துப் படர்ந்த அரசமரத்தின் வயது எப்படியும் முந்நூற்றுக்கு மேலாகவே இருக்கும். இந்தப் போதி கன்ருக நாட்டப்படாது தாமாகவே (தான்தோன்றியாகவே) கோவில் முன்றிலில் முளைத்துத் தோன்றிற்று என்பது திரு. சின்னத்தம்பி என்பாரின் முன்னேரது வாய்ப்பிறப்பு என்பதை மேலும் எனது பேரனர் திரு. வல்லிபுரத்திடமிருந்து அறியமுடிந்தது. அரசமரத்தின் மறுபெயர் போதி. அப்படியிருந்தும் இந்த அரசமரம் காரணமாகவே போதி என்னும் பெயர் கோவிலுக்குச் சூட்டப்பட்டது என்பதைவிட, கோவிற்காணி உறுதியிலுள்ள போதிராப்பிட்டி என்னும் பெயர் சுருங்கித் தானியாகு பெயராகப் போதி என்று வந்திருக்கலாமென்று கொள்ளுவதே கோவிலின் பெயருக்குக் கூடிய பொருத்தம். திருச்சிராப்பள்ளி என்னும் பெயர் சுருங்கி திருச்சி என்று அழைக்கப்படுவதுபோலவே போதிராப்பிட்டி என்ற பெயரும் சுருங்கி போதி என்று வரலாயிற்று. அத்துடன் தான் தோன்றி அரசமரத்தின்பின் இப்பெயர் காரணப் பெயராயும் வலுவுற்றுள்ளது. இவ்வாதாரங்களும் சில கர்ண பரம்பரைக் கதைகளும் இணைந்து இக்கோவில் ஐரோப்பிய அன்னியர் இலங்கைக்குக் காலெடுத்து வைப்பதற்கு முன்னரே வழிபடப்பட்டு வந்ததெனக் கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிதொட்டிருந்துவந்த மண்ணுலான கோவிலையும் சுற்று மதிலையும் மதவெறிபிடித்த போத்துக்கீசர் அழித்த பின், அதிலிருந்து பல்லாண்டுகளுக்குப்பின் எம் ஆன்றோர் ஒல்லாந்தர் காலத்தில் ஒருமுறை மண்ணுலும் மறுமுறை சுண்ணும்பாலும் கல்லாலும் திரும்பவும் கட்டினர். மீண்டும் பழுதடைந்து இருந்த கோவிலை இடித்துப் பொழிந்த கற்க ளாலும் கொங்கிறீற் கட்டிகளாலும் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் எம்முன்னோர் கட்டினர். இக்கோவிலைப் புதுப் பித்துக் கட்டுவதற்கு அன்று மலாயாநாட்டில் வங்கியொன் றில் தொழில்புரிந்துகொண்டிருந்த எனது மாமனர் திரு. காசிப்பிள்ளை அவர்களும், அங்கு அரசினர் கல்லூரி ஒன்றில் அதிபராய்க் கடமையாற்றிக்கொண்டிருந்த எனது சிறிய தகப்பனர் திரு. செல்லப்பா அவர்களும் பெருமுயற்சி எடுத்தனர். மலாயாவில் தொழில்புரிந்த பல தோப்பு வாசிகளினதும், தோப்புவாழ் மக்களினதும் ஒத்துழைப்பி ஞலும் ஒத்தாசையினுலும் கட்டட வேலைகள் நிறைவேற் றப்பட்டு மடாலயமாக இருந்த ஆலயம் சிவாகம முறைப் படி அமைக்கப்பட்டுப் பூசிக்கப்பட்டு வருகிறது. பண்டு தொட்டுப் பூசிக்கப்பட்டுவந்த பிள்ளையார் விக்கிரகம் சிறிய வலம்புரி விநாயகராக இருந்தது. அது இன்று கொடிமரத் தடியில் வைக்கப்பட்டு வணங்கப்படுகிறது. ஆலயப் பிரமா ணத்துக்கமைந்த புதிய பெரிய பிள்ளையார் விக்கிரகம் ஒன்று மூலஸ்தானத்தில் தாபிக்கப்பெற்றுள்ளது.

கோவில் தோப்பு வேளாண் மக்களுடையதாக இருந்துவந்தபோதிலும் அச்சுவேலியைச் சேர்ந்த ஆசார சீலர்களான செட்டி குடும்பத்தினராலேயே கோவிற் பூசை செய்யப்பட்டு வந்தது. ஆனுல் கும்பாபி ஷேகம் தொட்டுப் பூசையை ஆவரங்கால் பிராமணர் களைக்கொண்டே கோவில் நிர்வாகத்தினர் செய்வித்து வரு கின்றனர். கோவில் திருவிழா ஒவ்வோராண்டும் ஆவணி மாதத்தில் பத்துத்தினங்களுக்கு நடைபெறும். கோவிலுக்கு முதற்கல் நாட்டிய நட்சத்திரமான மிருகசீரிடத்தில் தீர்த்தம் நிகழும். தினசரி பூசை காலையில் ஏழு மணிக்கும் மாலையில் ஐந்து மணிக்கும் நடைபெறும். செவ்வாய்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி ஆகிய தினங்களிலும், விநாயக சதுர்த்தி, கந்தசஷ்டி, சிவராத்திரி, பெருங்கதை, நவராத்திரி, தைப்பொங்கல், தைப்பூசம், மாசிமகம், ஆனிஉத்தரம், ஆடிப்பூரம், ஆவணிச் சதுர்த்தி, ஐப்பசி வெள்ளி, கார்த்திகைத் திங்கள், திருவெம்பாவை போன்ற புண்ணிய காலங்களின் போதும் விசேட பூசைகள் நடைபெறும். கோவிலை அறநெறியில் பரிபாலிப்பதற்காக வழிபடுவோரால் திருப்பணிச்சபையொன்று தேர்ந்தெடுக்கப்பட்டுத் துரிதமாக இயங்கி வருகிறது.

போத்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக் காலங்களின்போது மதமாற்றம் செய்யும் முயற்சி அச்சுவேலியில் பெருமளவில் எடுக்கப்பட்டுவந்துள்ளது. அச்சுவேலி மக்களோ அதற்கு அதிகம் இடம்கொடுத்ததாகத் தெரியவில்லை. அதுவும் தோப்பு மக்கள் அடியோடு இடம் கொடுக்கவில்லை. இரண்டொரு பேர்கள் மட்டும் மதம் மாறியதாகத் தெரியவருகிறது. அப்பர் அடிகள் சமணத்திற் சேர்ந்து மீண்டும் சைவத்துக்குத் திரும்பியது போல அந்த ஒரு சில அன்பர்களும் போதிப்பிள்ளையாரின் அருளால் மீண்டும் தமது பரம்பரை மதத்துக்குத் திரும்பியுள்ளனர். என்னே போதிப்பிள்ளையாரின் திருவிளையாடல்!

போதிப்பிள்ளையார் பிறிது நலன்களுடன் நீண்ட ஆயுளையும் தனது தோப்பு அடியார்களுக்குக் கொடுத்து வருகின்றார். பிள்ளையாரின் அடியார்களுள்ளும் தலைசிறந்த அடியாராகக் கணிக்கப்பட்டுள்ள திரு. ஆ. சிதம்பரப்பிள்ளை அவர்கள் தனது தொண்ணூற்றொன்றுவது வயதில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார். அவர் இன்னும் சில ஆண்டுகளேனும் வாழ்வார். வாழவேண்டுமென்பதே எமது விருப்பும். தோப்பு மக்களின் இன்றைய சராசரி இறப்பு வயது ஆகக் குறைந்தது எழுபது எனலாம்.

போதிப்பிள்ளையாரின் அற்புதங்களோ சொல்லிலடங்கா. கலியுகத்திற் கண்கண்ட தெய்வங்களுள் போதிப்பிள்ளையாரும் ஒருவர். நடுச்சாமத்தில் பிள்ளையார் கோவிலுள் பூசைமணி கேட்பதைப் பல பக்தர்கள் கேட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது தல விருட்சமான போதியின் அடிப்பாகத்தில் யானையின் முகம்போன்ற வடிவத்தை அடியார்கள் தொட்டுக் கண்ணிலொற்றி வணங்குவது இன்னொரு அற்புதம். சில அடியார்கள் போதிவிருட்சத்தினை நூற்றெட்டு முறை வலம்வந்து வணங்குவதுமுண்டு. கோவிலின் மூலஸ்தானத்தின் பின்புறத்தில் அடியேன் நாட்டியிருக்கும் அரசங்கன்று முதிர்ந்த போதியின் வித்திலிருந்தே பிறந்தது. இந்த அரசங்கன்று பற்றியும் ஒரு அற்புதம் உண்டு. காலம் இதனையும் வெளியிடும். இன்னும் எத்தனையோ அற்புதங்கள் பற்றி எழுதலாம். ஆனால் ஆன்மீகம் குறைந்து, நாஸ்திகமும் கோவில்களில் களவு போன்ற அக்கிரமங்களும் தலைதூக்கி நிற்கும் இக்காலத்தில் அவை பற்றி விவரிப்பின் கேலிக் கூத்தாகிவிடும்.

பிள்ளையார் கோவிலின் உள்வீதியின் வடமேற்கு மூலையில் எழுந்தருளியுள்ள முருகன் கோவில் செல்வச் சந்நிதி முருகனை நினைவூட்டியவாறு இருக்கின்றது. கோவிலின் துரித வளர்ச்சியைக் கொண்டு கோவிலின் எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதை அடியார்கள் நன்குணரலாம்.

தோப்பின் வலது கண் போதிப்பிள்ளையாரெனின் அதன் இடது கண் தோப்பு மதுரை மீனாட்சி அம்மாள் எனலாம். மகன் பிள்ளையாரின் கோவிலும், சக்தி மீனாட்சி அம்மாளின் கோவிலும் அக்கம் பக்கமாக நீள் கோட்டில் ஒரு அரைக்கால் கிலோ மீற்றர் தொலைவில் மட்டும் அமைந்திருக்க, அம்மாளையும் பிள்ளையாரையும் பதியும் தந்தையுமாக நின்று இணைக்கும் முழுமுதற் கடவுளாக ஆவரங்கால் சிவன் ஒரு அரைக்கிலோ மீற்றர் தொலைவில் எழுந்தருளியிருக்கின்றார். இத்திருக்கோவிலின் திருவருளைத் தோப்பு மக்களும், அச்சுவேலி ஆவரங்கால் மக்களும், மற்று ஏனைய மக்களும் பெறுவார்களாக!

"யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"

"விடுதலைக் கோவில்" **இ. சங்கரப்பிள்ளை**
ஆஸ்பத்திரி வீதி (தோப்பு)
அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

போதிப் பிள்ளையார் துணை

**ஆற்றுப் படைக்காணை ஆனைமுகா போதியாய்**
**போற்றுக் குரியாய் புகல்.**

**போற்றியோம் போதி போற்றி, சயசய போற்றி போற்றி.**

# போதிப்பிள்ளையார் ஆற்றுப்படை

''சீரும் திருவும் திகழும் சீலமும்
ஆரும் மதிக்கும் அறிவொளிர் வதனமும்
ஏறு நடையும் இன்சொலும் இரக்கமும்
நீறும்சந்த னமும் நிலவும் நெற்றியும்
பத்திமைப் பாங்கும், பாட்டும் பணிவும்
விட்டிமை யாவிழித் தியானமும் விரதமும்
ஏடணி கரமும் எழுதுகோ லிவையும்
பீடமை உடையும் பிள்ளைமைப் பண்பும்
சித்தருக் காம்சிற் றரசுக்கு மாம்எனச்
சித்தத் தெண்ணிச் செவ்விபெற் றிடவே
காத்திருந் தேன்சில காலம் கிடைத்தது;
ஆத்த வணக்கம்; அன்பரீர் வணக்கம்;
சாதா ரணன்நான்; அசாதா ரணர்நீர்;
ஏதாம் இந்த இளமையும் வளமையும்
பொருந்தியும் போகமேற் புலன்செலா திங்கே
மருந்தாம் கற்ப காம்பிகை வாமன்
ஞாலம் வியக்க ஞானசம் பந்தரும்
சீலம் திறம்பாச் சிவனடி யார்களும்
மணவணி யோடுயர் மங்கள வீட்டினில்
அணைதர அருள்கபா லீசரா லயத்தில்
வாரம் வழாது வழிபட வருகிறீர்?
சாரும் குறையெதோ? சார்ந்ததாய் உணர்கிலேன்;
இறையருள் நும்பால் இலங்குதல் காண்கிறேன்;
குறையற இறையருள் கூடுமா றுணர்த்துவீர்''
என்றெனை எய்திய எம்பிராற் கன்பரீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தனே பத்தனே சிறந்தோனே அலேன்;
சித்தி புத்திசேர் சீரருள் விநாயகன்
அடிபணி அடிமையான்; அவன்அருள் வலத்தால்
மிடியிலேன்; எண்ணிய வினைநிறை வாகும்;
நாவலம், பாவலம், நல்வித்தை நண்ணினன்;
காவலன் கணேசன் கருணை கைவர
உள்ளது போதுமென் றுவப்புடன் உறைவேன்;
எள்ளத் தனையும்மேல் இச்சை கொள்கிலேன்;
ஈழ நாட்டினேன் ஏற்றமாங் கல்வியைச்
சோழ நாட்டிலே தொடரவந் துள்ளேன்;
தாயக மாகிய தோப்பூர் தனக்கோர்
நாயக மாகிய போதி விநாயகன்
பாதம் பணிந்து குற்றேவல் பயிலுதல்
ஏதந் தீர இளமைதொட் டியற்றுவேன்;
சாருமத் தவத்தால் இத்தலம் சார்ந்தனன்;
சேருமித் தலத்துமச் சேட்டன் தியானமே;
அங்குசத் தடங்கும் களிறலனவன், அவனே
அங்குசத் தகிலமும் அடக்கும் களிறும்.
அன்பெனும் தோட்டியில் அடங்கும் அடியவர்க்(கு)
அன்பனும் அடியனும் ஆண்டானும் ஆவான்.
அடைந்தார்க் கடைதற் கரும்பொருள் ஒன்றிலை,
தொடர்ந்தார்க்கொன்றும் தொடர்துணை அவனும்;
உத்தரத் துறைவார் தென்திசைக் குயர்வுசெய்
திருவிரா மேச்சர தெரிசனத் தணைதலும்
தெக்கண தேயர் உத்தரக் காசி
விசுவ நாதரை விசுவசித் தணைதலும்
என்றும் இயற்கைபோல் இலங்கையர் இந்திய
நன்றுள இனிய தலங்களை நாடலும்,
இந்தியர் ஈழக் கதிர்காமம் ஆதியாம்
வந்தனை இடவகை யாத்திரை வருதலும்
எம்பிரான் அருளால் இடர்குறை தீர்தலும்
எம்பியே! வழக்கம், எண்ணித் துணிமதி;
ஈழ நாட்டுக்கு யாத்திரை வருக;
வாழ வரம்தரும் வடகயி லாயன்
சேர்தென் கயிலையாம் திருக்கே தீச்சரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏர்மலி கோணமா மலையெனும் தலங்களும்
பிறவும் பணியலாம்; பேறெலாம் பெறலாம்;
அறுகணி அமலன்; அருட்பிர காசன்
போதி நீழலான் போறென மலர்முகன்
பூதியான் மகன் புவன பூடணன்
வள்ளி, குமரனும் வள்ளலை மணந்திட
வெள்ள மதம்பொழி வேழமாய் வந்தவன்
பாத கமலம் பணிபவர் பாலுள
பாதகம லங்கள் பற்றறப் போக்குவான்
நினையும் வரமெலாம் நிறைவுற அருளுவான்
அனையனை யணுகும் ஆறது கேளீர்;
சென்னை விமான நிலையஞ்சேர்ந் தேறின்
பின்னே ஒருமணி வான்பிர யாணம்
இலங்கையில் கொழும்பில் இறங்கியங் கிருந்தே
துலங்குசீர் யாழ்நகர்ப் பயணம் தொடரலாம்
அங்கிருந் தச்சையூர் பதினொரு கல்வழி
இங்குள ''ஆசுப் பத்திரித்'' தரிப்பிடம்
இறங்குவீர், இடப்பால் வீதியில் ஏகுவீர்
பிறங்குசீர் இராச வீதியாம் பெருவழி
ஏறிச் சென்றிரு காலிடம் திரும்ப
பேறிச் சகத்துக் கெனவரும் பிள்ளையார்
கோவில் வளாக வீதியில் குறுகினீர்
பனையும் தென்னையும் மாபலா வாழையும்
விளைவயல் தோட்டமும் விரிமரு திருக்கையில்
அணிதிகழ் தோப்பூர் விநாயகர் ஆலய
முன்றிலில் ஆதியாம் போதிஒன் றுளதால்
போதி வானவன் பிரணவன் புராணன்
அற்புதம் பலபுரி நித்தியா னந்தன்
பிள்ளை யற்றோர்க்குப் பிள்ளைகள் ஈந்தும்
கண்ணற்ற வர்க்குக் கண்ணொளி நல்கியும்
பிழையிழைத் தோர்பிழைத் துய்வழி காட்டியும்
தோற்றவர் வென்றிட ஆற்றலைத் தொகுத்தும்
செல்லலுற் றவர்க்கெலாச் செல்வமும் சேர்த்தும்
நோயும் பிணியுமில் ஆயுள்நூ றளித்தும்
கருணை மாமழை பொழிகா ருண்ணியன்

2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புத வித்தகன் அநந்த அற்புதன்
தொந்தி வயிற்றனைத் தொழுதிட முந்துவீர்
சந்தி இரண்டிலும் சதுர்மறை ஆகமம்
புந்திகொள் பூசுரர் பூசனை புரிகுவர்
பக்தர் பத்தியால் விரவிப் பரவுவர்
திருப்பணிச் சபையார் சேவைத் திறத்தால்
புறமும் அகமும் பொலிவுறும் தூய்மை
வேண்டாம் பேச்சினி விருப்புடன் திருப்பதம்
பூண்டோம் சென்னியில் போற்றெமைப்போற்றெனத்
தோத்திரஞ் சொல்லும் தொண்டரைத் தொடர்வீர்
முன்னவா போற்றி முதல்வா போற்றி
மன்னவா போற்றிஎம் வாழ்வே போற்றி
கன்னலே தேனே கனியே போற்றி
பன்னகா பரனு பரமா போற்றி
அண்ணலே போற்றி ஐங்கரா போற்றி
பெண்ணுவாள் உமையருள் பிரபுவே போற்றி
திருமால் மருகா சிவனே போற்றி
கருவாய் புகாமே காப்பாய் போற்றி
கயமுகா சுரனைக் காய்ந்தாய் போற்றி
நயமுகாம் புயபதம் நல்குவாய் போற்றி
மோதகப் பிரியா முக்கணு போற்றி
பூத கணுதிபா பூரணு போற்றி
அநந்தா னந்தா சுகமருள் ஐயனே
அநந்தா அநகா அநாதியாம் மெய்யா
போதியாய் போற்றி பொன்னடி போற்றி
நீதியாய் போற்றி எனநிகழ் துதிபல
பாடுக; பாடவே பழவடியா ரெலாம்
நாடுவர்; புத்தடி யானிவன் நலம்பெற
அத்தி முகத்தெம் ஐயனே அருள்க
சித்தியும் புத்தியும் பத்தியும் முத்தியும்
வாய்த்திட வழங்குக எனவாழ்த் தெடுப்பர்
தாய்த்தலை அருளொடும் சண்முகன் அண்ணன்
அஞ்சலென் றபய வரதமுன் அளித்தே
எஞ்சலி லாதெவ் வரங்களும் ஈகுவன்
சஞ்சலம் இலாதவன் தாள்சர ணடைவீர்
நெஞ்சகம் நிரம்ப நீடருள் நிறையுமே.

சுபம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# போதிப்பிள்ளையார் திருவூஞ்சற் பதிகம்

## காப்பு

உலகு போற்றிட ஊறுதீர்த் (து) உய்யக்கொண்டு
இலகு போதியில் ஏரம்ப எம்பிரான்
நலனை நல்கும்நின் ஊஞ்சல் நவின்றிடும்
புலமை நல்குநின் பொன்னடி போற்றுவோம்.

## திருவூஞ்சல் நூல்

சீராரும் பவளங்கால் வயிரம் விட்டம்
தெண்முத்து வடஞ்சேர் பொற்பலகை பூண்ட
ஏராரும் ஊஞ்சல்மேல் ஏறி வைகி
எண்ணியிணை யடிபோற்றி ஏத்துவார்தம்
பேராரும் செயலூறு நீங்கி முற்றிப்
பேறுக அருள்புரியும் பெம்மான் பெய்யும்
காராரும் காவனையும் தோப்பூர் காக்கும்
கவின்போதி விநாயகரே! ஆடீர் ஊஞ்சல்.

கதிரவனும் கலைமதியும் கவிகை தாங்கக்
காலவனும் கரத்தேந்திக் கவரி வீசக்
கதிரவன்சேய் காலன்உடை வாளைப் பற்றக்
கடலரசன் வட்டங்கால் பற்றி நிற்க
மதுர இசை பாடிஅர மகளீர் ஆட
மலர்மழையும் வானகதுந் துபியும் ஆர்ப்ப
மதுரமொழி உமைமகனே தோப்பூர் காக்கும்
மாண்போதி விநாயகரே! ஆடீர் ஊஞ்சல்.

அரும்பரவை அஞ்சலிநாண் மலர்ந்த கஞ்சத் (து)
அலர்முகத்தோடு அகல்இலைமேல் துளிநீர் போர்த்த
அரும்புளகம் கருங்குவளைக் கண்ணீர் கண்ணீர்
ஆங்குவளை கதிர்ச்சாலி வணக்கம் ஆரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரும்பரிசை தோத்திரமாம் தொடர்பால் தொண்டர்
தொழுமாறு வயல்தொழுது நாளுஞ் சூழ
வரும்பெரிய வளந்திகழும் தோப்பூர் காக்கும்
வாழ்போதி விநாயகரே! ஆடீர் ஊஞ்சல்.

முன்னொருவ! பின்னிருவர் தெளிந்து தேறு
முக்கண்ணால் வாயைந்து கரத்த! என்றும்
நின்னுருவை நாலாறும் ஏழும் ஐந்தும்
நீத்தார்க்குக் காட்டெட்டுக் குணத்த! ஒன்பான்
என்னுருவிற் சக்திகளாய்ப் பத்தர் எண்ணத் (து)
எண்ணுமுன் அரிதும்எளி தாக்கும் ஈச
பொன்னுரிமை கொளும்பொற்பார் தோப்பூர் காக்கும்
பொலிபோதி விநாயகரே! ஆடீர் ஊஞ்சல்.

ஆணவவேர் அசைந்தாட, அதனாற் செய்த
அருவினைக்கட் (டு) அறுந்தாட அதற்கி டாகப்
பூணுறவே பொருந்திவரும் மாயை பூத்த
புவனதனு கரணபோகங்க ளாட
மாணுறவே வருசக்தி வசமா யாட
மலர்ஞான ஒளியாட மருவும் முக்தி
காணுறு நாம் களித்தாடத் தோப்பூர் காக்கும்
காண்போதி விநாயகரே! ஆடீர் ஊஞ்சல்.

மதிஏறும் மணிநாறும் மகுடம் ஆட
மன்னுமுக படாமாட மருப்பும் ஆடத்
துதிஏறு கர்ணபூ டணமும் ஆடச்
சுடர்கண்ட சரம்ஐந்து கரத்தோ டாட
மதுஏறு தார்தொந்தி வயிற்றோ டாட
மறைசூழும் மலரடிஎம் மனத்து டாட
நிதிஏறு மாடநிறை தோப்பூர் காக்கும்
நிகழ்போதி விநாயகரே! ஆடீர் ஊஞ்சல்.

ஆறுமுக வரன்முன்பு வந்தீர் ஆடீர்
ஆறுதலை அரன்முன்பு தந்தீர் ஆடீர்
மாறுமுக அசுரர்கிளை அழிப்பீர் ஆடீர்
மருவுமகச் சுரர்கிளையை அளிப்பீர் ஆடீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊறுமுனம் நினையாருக் (கு) உழைப்பீர் ஆடீர்
உறுதியகம் நினைவாருக் (கு) உழைப்பீர் ஆடீர்
நாறுமுக மலர்ச்சோலை அச்சைத் தோப்பில்
நற்போதிப் பிள்ளையாரே! ஆடீர் ஊஞ்சல்.

அருள்சேர்முக் கண்ணரே ஆடீர் ஊஞ்சல்
அன்பிலர்க் (கு) அண்ணரே ஆடீர் ஊஞ்சல்
பொருள்சேர்ஓர் அக்கரத்தீர் ஆடீர் ஊஞ்சல்
பொற்பாரும் ஐங்கரத்தீர் ஆடீர் ஊஞ்சல்
இருள்சேரும் வினையழிப்பீர் ஆடீர் ஊஞ்சல்
இடர்சேரா நினைவளிப்பீர் ஆடீர் ஊஞ்சல்
தெருள்சேரும் அருந்தாளீர் ஆடீர் ஊஞ்சல்
சீர்ப்போதி இருந்தாள்வீர் ஆடீர் ஊஞ்சல்.

மலைமான்ஈன் மதகளிறே ஆடீர் ஊஞ்சல்
மருவெளிமேல் வருமலையே ஆடீர் ஊஞ்சல்
மலையாளன் அருட்கடலே ஆடீர் ஊஞ்சல்
மறைஓதும் தூவெளியே ஆடீர் ஊஞ்சல்
அலைவாணன் நிலைமருகீர் ஆடீர் ஊஞ்சல்
அரும்பணிகண் (டு) எளிவருவீர் ஆடீர் ஊஞ்சல்
தலையானூர் தாழ்அடியீர் ஆடீர் ஊஞ்சல்
தகுபோதி கொள்குடியீர் ஆடீர் ஊஞ்சல்.

சித்திபுத்தி விநாயகரே ஆடீர் ஊஞ்சல்
சித்திதரு விநாயகரே ஆடீர் ஊஞ்சல்
பத்திவித்து வினைமுகத்தீர் ஆடீர் ஊஞ்சல்
பச்சறுகில் தளைபதத்தீர் ஆடீர் ஊஞ்சல்
நித்தசக்தி வல்லபையீர் ஆடீர் ஊஞ்சல்
நிகரில்லா வல்லமையீர் ஆடீர் ஊஞ்சல்
சித்தசுத்தி செய்படையீர் ஆடீர் ஊஞ்சல்
சீர்ப்போதி சேர்வுடையீர்! ஆடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழி விருத்தம்

வாழி அச்சைத் தோப்பூரில் வாழும் போதி விநாயகனுர்
வாழி தோப்பூர் அடித்தொண்டர் வாழி சைவம் வைதிகமும்
வாழி மழையும் வையகமும் வாழி நீறும் தண்டிகையும்
வாழி தமிழும் மன்னறமும் எல்லா உலகும் வாழியவே!

வாழி வாழி வாழியவே.

## எச்சரீக்கை

முதற்பூசை கொள்முதல்வா குகற்கண்ணு — எச்சரீக்கை
முதலீறிடை நிலையாகு முக்கண்ணு — எச்சரீக்கை
கதத்தோடெழு கயமாமுகற் காய்ந்தாய் — எச்சரீக்கை
கணத்தோர்களைக் காத்தேயருள் ஈந்தாய் — எச்சரீக்கை

மகவானயன் மால்போற்றி செய்பாதா — எச்சரீக்கை
மறவாதுனை நினைவார் மனப்போதா — எச்சரீக்கை
தகவேயில தனுசந்ததி நாசா — எச்சரீக்கை
தகவேயறம் தழைவிப்பவர் நேசா — எச்சரீக்கை

போதத்துறை பூவைமகிழ் மருகா — எச்சரீக்கை
புவனேஸ்வர பரிபூரண உருவா — எச்சரீக்கை
போதிப்பதி மகிழ்போதக முகனே — எச்சரீக்கை
பொய்யா அரிச்சந்திரற்கருள் புதனே — எச்சரீக்கை

## பராக்கு

திங்களணி செஞ்சடைய நேசா — பராக்கு
தினகரனில் ஒளியுடைய தேசா — பராக்கு
மங்கள நல்வடிவுடைய மதனே — பராக்கு
மாறிவருள் வளம்நல்கு புதனே — பராக்கு

கரும்பருந்து கஈதலுள கரியே — பராக்கு
கண்ணுதலோன் உமைக்கு மிகப்பிரியா — பராக்கு
பெரும்பிரணவப் படிவ பெம்மான் — பராக்கு
பேராயிரம் பெற்ற எம்மான் — பராக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதகமுன் உகந்தருளும் முதலே — பராக்கு
மோகமற முத்திதரு மதலாய் — பராக்கு
போதியமர் புங்கவச காயா — பராக்கு
போற்றி யெமைப் புரந்தருளுவாயே — பராக்கு

## மங்களம்

சித்தி புத்தி நாயகர்க்கு மங்களம் — எங்கள்
சிந்தை கொள் விநாயகர்க்கு மங்களம்
அத்திமுகத் தைங்கரர்க்கு மங்களம் — எங்கள்
அங்குசங்கொள் ஐங்கரர்க்கு மங்களம்.

ஆகுதனை ஊர்பவர்க்கு மங்களம் — தெய்வ
ஆறுதலைச் சேர்பவர்க்கு மங்களம்.
நாகமணி பூண்பவர்க்கு மங்களம் — துய்ய
ஞானநெறி காண்பவர்க்கு மங்களம்.

செங்கமலப் பாதருக்கு மங்களம் — சூழும்
சிவபூத நாதருக்கு மங்களம்.
பொங்குமருட் காரணர்க்கு மங்களம் — நாளும்
போதியமர் பூரணர்க்கு மங்களம்.

மங்களம் சுப மங்களம்.

சிவன் தேவஸ்தானம், **பண்டிதர் ச. சுப்பிரமணியம்**
ஆவரங்கால். தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம்

# போதி அர்ச்சனை (108 திருநாமாஞ்சலி)

1. ஓம் அன்பு தரும் போதி போற்றி
ஓம் அழகு தரும் போதி போற்றி
ஓம் அறிவு தரும் போதி போற்றி
ஓம் அருள் தரும் போதி போற்றி
ஓம் அடக்கம் தரும் போதி போற்றி
ஓம் அறம் தரும் போதி போற்றி
ஓம் அமைதி தரும் போதி போற்றி
ஓம் ஆண்மை தரும் போதி போற்றி
ஓம் ஆயுள் தரும் போதி போற்றி

10. ஓம் ஆட்சி தரும் போதி போற்றி
ஓம் ஆசி தரும் போதி போற்றி
ஓம் ஆக்கம் தரும் போதி போற்றி
ஓம் இளமை தரும் போதி போற்றி
ஓம் இன்பம் தரும் போதி போற்றி
ஓம் இசை தரும் போதி போற்றி
ஓம் இன்சொல் தரும் போதி போற்றி
ஓம் இனிமை தரும் போதி போற்றி
ஓம் ஈகை தரும் போதி போற்றி
ஓம் உவகை தரும் போதி போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. ஓம் உறுதி தரும் போதி போற்றி
ஓம் உயர்வு தரும் போதி போற்றி
ஓம் உண்மை தரும் போதி போற்றி
ஓம் உய்வு தரும் போதி போற்றி
ஓம் ஊக்கம் தரும் போதி போற்றி
ஓம் எளிமை தரும் போதி போற்றி
ஓம் எழில் தரும் போதி போற்றி
ஓம் ஏற்றம் தரும் போதி போற்றி
ஓம் ஒற்றுமை தரும் போதி போற்றி
ஓம் ஒருமை தரும் போதி போற்றி

30. ஓம் ஒலி தரும் போதி போற்றி
ஓம் ஒளி தரும் போதி போற்றி
ஓம் கல்வி தரும் போதி போற்றி
ஓம் கவிதை தரும் போதி போற்றி
ஓம் கனவு தரும் போதி போற்றி
ஓம் கனிவு தரும் போதி போற்றி
ஓம் கருணை தரும் போதி போற்றி
ஓம் கற்பு தரும் போதி போற்றி
ஓம் கடமை தரும் போதி போற்றி
ஓம் காதல் தரும் போதி போற்றி

40. ஓம் காவல் தரும் போதி போற்றி
ஓம் காட்சி தரும் போதி போற்றி
ஓம் கீதம் தரும் போதி போற்றி
ஓம் கீர்த்தி தரும் போதி போற்றி
ஓம் கொல்லாமை தரும் போதி போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி தரும் போதி போற்றி
ஓம் சந்ததி தரும் போதி போற்றி
ஓம் சாந்தி தரும் போதி போற்றி
ஓம் சித்தி தரும் போதி போற்றி
ஓம் சீலம் தரும் போதி போற்றி

50. ஓம் சுத்தம் தரும் போதி போற்றி
ஓம் சுகம் தரும் போதி போற்றி
ஓம் செம்மை தரும் போதி போற்றி
ஓம் செழுமை தரும் போதி போற்றி
ஓம் செல்வம் தரும் போதி போற்றி
ஓம் சொல்வன்மை தரும் போதி போற்றி
ஓம் சோதி தரும் போதி போற்றி
ஓம் தவம் தரும் போதி போற்றி
ஓம் தர்மம் தரும் போதி போற்றி
ஓம் தயை தரும் போதி போற்றி

60. ஓம் தாய்மை தரும் போதி போற்றி
ஓம் தானம் தரும் போதி போற்றி
ஓம் தியாகம் தரும் போதி போற்றி
ஓம் துணிவு தரும் போதி போற்றி
ஓம் தூய்மை தரும் போதி போற்றி
ஓம் தெளிவு தரும் போதி போற்றி
ஓம் பக்தி தரும் போதி போற்றி
ஓம் பரிவு தரும் போதி போற்றி
ஓம் பலம் தரும் போதி போற்றி
ஓம் பணிவு தரும் போதி போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70. ஓம் பண்பு தரும் போதி போற்றி
ஓம் பயன் தரும் போதி போற்றி
ஓம் பலன் தரும் போதி போற்றி
ஓம் பயிற்சி தரும் போதி போற்றி
ஓம் பாட்டு தரும் போதி போற்றி
ஓம் பார்வை தரும் போதி போற்றி
ஓம் பீடு தரும் போதி போற்றி
ஓம் புதுமை தரும் போதி போற்றி
ஓம் புண்ணியம் தரும் போதி போற்றி
ஓம் புகழ் தரும் போதி போற்றி

80. ஓம் பெண்மை தரும் போதி போற்றி
ஓம் பொலிவு தரும் போதி போற்றி
ஓம் பொருள் தரும் போதி போற்றி
ஓம் பொறுமை தரும் போதி போற்றி
ஓம் வன்மை தரும் போதி போற்றி
ஓம் வாய்மை தரும் போதி போற்றி
ஓம் வாழ்வு தரும் போதி போற்றி
ஓம் விடிவு தரும் போதி போற்றி
ஓம் வித்தை தரும் போதி போற்றி
ஓம் வீடு தரும் போதி போற்றி

90. ஓம் வீரம் தரும் போதி போற்றி
ஓம் வெற்றி தரும் போதி போற்றி
ஓம் மகிழ்ச்சி தரும் போதி போற்றி
ஓம் மகிமை தரும் போதி போற்றி
ஓம் மழை தரும் போதி போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் மானம் தரும் போதி போற்றி
ஓம் மாண்பு தரும் போதி போற்றி
ஓம் மேன்மை தரும் போதி போற்றி
ஓம் மெய்மை தரும் போதி போற்றி
ஓம் நன்மை தரும் போதி போற்றி

100. ஓம் நன்றி தரும் போதி போற்றி
ஓம் நட்பு தரும் போதி போற்றி
ஓம் நிறைவு தரும் போதி போற்றி
ஓம் நீதி தரும் போதி போற்றி
ஓம் நேர்மை தரும் போதி போற்றி
ஓம் நோன்பு தரும் போதி போற்றி
ஓம் யோகம் தரும் போதி போற்றி
ஓம் ஞானம் தரும் போதி போற்றி
108. ஓம் முத்தி தரும் போதி போற்றி

சுபம்.

**இ. சங்கரப்பிள்ளை.**

தோப்பு
போதிப்பிள்ளையார் சந்நிதி,
அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலாசிரியர் ஆக்கிய பிற நூல்கள்

**முன் வெளிவந்த நூல்கள்:**

1. தந்தையின் (திரு. வல்லிபுரம் இளையதம்பி அவர்களின்) நினைவு மலர்
2. அன்னையின் (திருமதி இளையதம்பி சேதுப் பிள்ளை அவர்களின்) நினைவு மலர்.
3. அனைத்துலக ஆசிரியர் (UNIVERSA[illegible] TEACHER) என்னும் ஆங்கில நூல்[illegible]

**வெளிவரவுள்ள நூல்:**

1. அர்ச்சனை

திருமகள் அழுத்தகம், சுன்னுகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org